Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 192

திங்கட்கிழமை
06 ஜூன் 2022

வைகாசி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 50/=



## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

72 மணித்தியாலங்களில் 4 பேர் சாவு

கொழும்பு, ஜூன் 6
தங்காலை - மொரகெடியர பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. சம்பவத் 15

## சாராயப் போத்தல் பறித்தது உயிரை

பரந்தனில் ஒருவர் சாவு!



கிளிநொச்சி, ஜூன் 6
மதுபான போத்தலை இடுப்பில் செருகிக் கொண்டு வந்தவர், நிலத்தில் விழுந்ததால், போத்தல் 15

# இரு வாரங்களில் அரிசியும் 'காலி'

அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் அபாய எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 6**

**இரண்டு வாரங்களுக்கு போதுமான அளவு அரிசி மட்டுமே கையிருப்பில் உள்ளது. போதியளவு நெல் கிடைக்காமையால் பல அரிசி ஆலைகள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் நேற்றுத் தெரிவித்துள்ளது.** 15

## பால்மா விலையும் மீண்டும் எகிறும்

கொழும்பு, ஜூன் 6
பெறுமதி சேர் வரி உட்பட சில வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால், கட்டாயம் பால் மாவின் விலைகளையும் அதிகரிக்க நேரிடும் என்று 15

## லாப்ஸ் காஸ் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 6
லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்களின் விலை அதிகரிக்கப் பட்டுள்ளது. 12.5 கிலோ சிலிண்டரின் புதிய விலை 6 ஆயிரத்து 850 ரூபா மற்றும் 5 15



## இ.போ.ச. சேவைகள் இன்று வழமைபோன்று இடம்பெறும்

கொழும்பு, ஜூன் 6
தூர சேவைகள் மற்றும் கிராம மட்டத்திலான பஸ் சேவைகள் இன்று முதல் வழமைபோன்று இடம்பெறும் என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. தற்போது இலங்கை போக்குவரத்து சபையிடமுள்ள எரிபொருள் கையிருப்பு, அடுத்த சில நாள்களுக்கு போதுமானதாக இருக்கும் என சபையின் நடவடிக்கை பிரிவு அதிகாரி வீரசூரிய தெரிவித்துள்ளார். 15

## ஆட்சியாளர் வீடுகளில் பொருள்கள் தாராளம்!

மக்களுக்கு மட்டும்தான் பிரச்சினை என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஜூன் 6
நாட்டில் மக்களுக்கு மட்டும் தான் பொருள்களுக்குத்தட்டுப் பாடு இருக்கின்றது. ஆனால் ஜனாதிபதிக்கோ, நாடாளுமன்றத்துக்கோ அல்லது அமைச்சர்களின் வீடுகளுக்கோ எந்தத் 15

## யாழ். பல்கலையினுள் புகுந்து 'ஹீரோயிசம்' காட்டிய இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அத்துமீறி உள்நுழைந்து மாணவர்களை மிரட்டி - தாக்குதல் நடத்த 12

## அரச பணியாளர்களுக்கு வெள்ளியில் விடுமுறை

அரசு தீவிர ஆலோசனை

கொழும்பு, ஜூன் 6
எதிர்வரும் காலங்களில் வெள்ளிக்கிழமைகளிலும் அரச பணியாளர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கான யோசனை விரைவில் முன்வைக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். 15

## 21ஆவது திருத்தம்: தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்று மூன்றாம் தடவையாக ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 6
அரசமைப்பின் 21ஆம் திருத்தம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பது தொடர்பில் இணையவழிக் கலந்துரையாடல் இன்று மாலை இடம்பெறவுள்ளது.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசி 15

## விவசாயிகளுக்கு டீசல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
விவசாயிகளுக்கு அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக நேற்றையதினம் டீசல் விநியோகிக்கப் 15

## இலங்கைத் தமிழருக்கான உதவிகள் தெலுங்கானா ஆளுநரும் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 6
இலங்கைத்தமிழர்களுக்கான உதவிகள் குறித்து மத்திய வெளியுறவுத்துறை மற்றும் கலாசாரத்துறை இணை அமைச்சர் மீனாட்சி லேகியுடன் தெலுங்கானா ஆளுநர் தமிழிசை ஆலோசனை நடத்தினார். புதுச்சேரிக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 13

## வடக்கு - கிழக்கு விவசாயிகள், மீனவர்களுக்கு நன்கொடை மண்ணெண்ணெய்

இந்தியத் தூதரகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 6
விவசாயிகள் மற்றும் மீனவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்கு அமைவாக நன்கொடையாக மண் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அரசாங்கத்தில்

# மத்திய வங்கி மீதான தலையீடு பொருளாதாரத்தைச் சிதைக்கும்!

## முன்னாள் பிரதி ஆளுநர் எச்சரிக்கை

**கொழும்பு, ஜன் 6**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மைக்கு மதிப்பளிக்கவேண்டும். மத்திய வங்கி மீதான எந்தவொரு எதிர்மறைத் தலையீடும் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு முன்னெடுக்கப் பட்டுவரும் முயற்சிகளை வலுவிழக்கச்செய்துவிடும் என்று இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ.ஏ.விஜேவர்தன எச்சரித்துள்ளார்.**

நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் ஆராயும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் நிகழ்வொன்றில் பங்கேற்றுக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவை இடையூறின்றி மேற்கொள்வதற்கு பில்லியன் கணக்கான ரூபாவை அச்சிட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப் பட்ட கருத்து பல்வேறு ஐயப்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நடவடிக்கையானது நீரிழிவு நோயாளிக்கு சீனியை அதிகளவில் உள்ள உணவை வழங்குவதைப் போன்றதாகும்.

இருப்பினும் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் புதிய வரி அறவீட்டு முறைமைகளை பிரதமர் இந்தவாரம் அறிவித்துள்ளமை நம்பிக்கையளிப்பதாகவுள்ளது.

அத்தோடு மத்திய வங்கியின் மீதான அநாவசிய தலையீடுகள், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குத் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள்மீது பெரியளவான தாக்கத்தை ஏற்படுத்தும் -என்றார். (ய)

## வெளிநாடு செல்வதற்கு அரச ஊழியருக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜுன் 6

தொழில் நிமித்தம் அல்லது வேறு எந்த நோக்கத்துக்காகவும் வெளிநாடு செல்ல விரும்பும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஐந்தாண்டு கால சம்பளமில்லாத விடுமுறை திட்டத்தை அறிமுகப் படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:- அரச ஊழியர்கள் 5 வருட நிறைவில் சம்பளம் இல்லாமல் விடுமுறை காலத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் சகல சலுகைகளுடனும் அவர்களின் பதவியுயர்வு மற்றும் தரங்களை மீளப் பெறுவார்கள்.

இதன்மூலம் அரச ஊழியர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் செல்வதற்கு வாய்ப்பு கிடைக்கும். இந்தத் திட்டம் அரச ஊழியர்களுக்கு பல நன்மைகளை வழங்கும் -என்றார். (எ-இ)

## பல நிறுவனங்களுக்கு 'கோப்' குழு அழைப்பு!

கொழும்பு, ஜுன் 6

நகர அபிவிருத்தி அதிகாரசபை நாளை முன்னிலையாகவேண்டுமென்று அரசுப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழு அழைப்பு விடுத்துள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 8ஆம் திகதி மொறட்டுவ பல்கலைக்கழகத்தையும், எதிர்வரும் 9ஆம் திகதி இலங்கை மின்சாரசபையையும் கோப் குழுவில் முன்னிலையாகவேண்டுமென்றும் அழைப்பு விடுக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளது. (எ-இ)

## ஆளுநர் நியமன விவகாரம்: ரணில் – கோத்தா இழுபறி

கொழும்பு, ஜுன் 6

இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்க பதவியில் இருந்து நீக்க வேண்டுமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதிக்கு யோசனை முன்வைத்துள்ளபோதும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதை நிராகரித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

மத்திய வங்கியின் புதிய ஆளுநராக தினேஷ் வீரக்கொடியை நியமிக்கவேண்டுமென்று யோசனை முன்வைத்துள்ளார் என்றும், அவ்வாறில்லாவிட்டால், பொருளாதாரம் சம்பந்தமான முக்கியமான முடிவுகளை தன்னால் எடுக்கமுடியாது எனவும் பிரதமர், ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

ஆயினும் பிரதமர் முன்வைத்த இந்த யோசனையை ஜனாதிபதி நிராகரித்துள்ளார் என்றும், எந்தக் காரணம் கொண்டும் நந்தலால் வீரசிங்கவை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் இருந்து நீக்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. ஜனாதிபதியின் இந்த முடிவால் இருவருக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## ஜோன்ஸ்டனைக் கைதுசெய்ய விசேட பொலிஸ் குழு அமைப்பு



கொழும்பு, ஜுன் 6

காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டோர் பட்டியலிலுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சந்தேகநபர்களைக் கைது செய்ய புதிய இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

குற்ற விசாரணைப் பிரிவால் நியமிக்கப்பட்ட இந்த இரண்டு விசேட பொலிஸ் குழு எதிர்வரும் சில தினங்களுக்குள் சந்தேகநபர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளது.

கடந்த 9ஆம் திகதி அலரி மாளிகையில் இடம் பெற்ற கலந்துரையாடலின்போது ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆக்ரோஷமான முறையில் பேசி, தொண்டர்களைக் கிளர்ந்தெழ செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- கடந்த மே9இல் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் இதுவரை 2 ஆயிரத்து 348 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## மே 9 வன்முறை 2,393 பேர் கைது



கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற 856 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 2 ஆயிரத்து 393 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் 45 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் 37 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். 18 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை மற்றும் அமைதியின்மை தொடர்பில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 55 என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (எ-இ)

## இராணுவத் தளபதிக்கு எதிராக மிச்செல் பச்லெட்டிடம் முறைப்பாடு

கொழும்பு, ஜுன் 6

புதிய இராணுவத் தளபதி விகும் லியனகேவுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

விகும் லியனகே பல போர்க்குற்றங்கள் செய்ததாக புலம்பெயர் விடுதலைப் புலிகள் அமைப்பால் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விகும் லியனகே, கஜபாகு படையணியில் விசுவமடு, புதுமாத்தளன், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் கடமையாற்றினார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விகும் லியனகே போர்க் குற்றங்களைச் செய்ததாக சாட்சியமளிக்க ஐரோப்பாவிலுள்ள 200 முன்னாள் விடுதலைப்புலிகள் செயற்பாட்டாளர்கள் முன்வந்துள்ளதாகவும் அந்த ஊடகம் ஒன்று மேலும் தெரிவித்துள்ளது. (ம-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசணைப் பிரச்சினையை எதிர்கொள்ளும் பேராபத்து

## விவசாயத்துறை அமைச்சு அபாய ஒலி

**கொழும்பு, ஜூன் 6**

**விலங்குணவு உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தி 19 சதவீதத்தாலும், கோழி இறைச்சி உற்பத்தி 13 சதவீதத்தாலும், முட்டை உற்பத்தி 34 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளதால் நடுத்தர மக்கள் போசணை சார்ந்த பிரச்சினைகளை எதிர் கொள்ள நேரிடும் என விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் ரோஹண புஸ்பகுமார தெரிவித்தார்.**

உணவுத் தட்டுப்பாடு தொடர்பில் வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு விவசாயத்துறை அமைச்சுக்கும், விவசாயத்துறையுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களுக்கும் உண்டு.

2021ஆம் ஆண்டு விவசாயத்துறை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட தவறான தீர்மானத்தை, விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் என்ற ரீதியில் திருத்திக்கொள்ள முன்னெடுத்த முயற்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து சுயவிருப்பத்துடன் விலகினேன்.

உணவுத் தட்டுப்பாடு தொடர்பில் தற்போது பல்வேறு தரப்பினர் பல விடயங்களைக் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது.

தரவு மற்றும் எதிர்வுகூறல் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு உணவுத் தட்டுப்பாட்டின் பாரதூரத்தன்மையை மதிப்பிடமுடியும்.

நாட்டின் விவசாயத்துறை மோசமான நிலையை எதிர்கொண்டுள்ளது என்பதை சகல தரப்பினரும் முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும். 2020ஆம் ஆண்டு அறுவடையின்போது 51 லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் கிடைத்ததைத் தொடர்ந்து அந்தக் காலத்தில் அரிசி உற்பத்தி சுமார் 39 லட்சம் மெற்றிக்தொன் என்றவாறாக இருந்தது. 2021ஆம் ஆண்டு 33 லட்சம் மெற்றிக்தொன் அரிசியே விளைச்சலாக கிடைத்தது - என்றார். (ம)

# ஊட்டச்சத்துக் குறைபாட்டால் 20 வீத சிறுவர் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 6

கொழும்பு- சீமாட்டி ரிட்ஜ்வே மருத்துவமனையில் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் 20 வீதமான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவமனையில் சிகிச்சை பெறவந்த சிறுவர்களின் நிறை மற்றும் உயரம் என்பன குறைந்திருந்ததை அடுத்து அவர்களைப் பரிசோதித்தபோதே இவ்வாறு குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டது. சிறுவர்கள் காபோவைதரேற்றுகள், புரதங்கள், கொழுப்புகள் மற்றும் விற்றமின்களை தேவையான அளவுகளில் பெறாததே இதற்குக் காரணம் என்று மருத்துவ கலாநிதி தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். (ம-14,இ)

# சிறுபோகமும் கைவிரித்தது

கொழும்பு, ஜூன் 6

விவசாயத்துறை எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில் சிறுபோக விவசாயத்தின் மூலமான நெல் அறுவடை 16 லட்சம் மெற்றிக்தொன்னாக மட்டுப்படுத்தப்படும் அபாயம் அதிகளவில் காணப்படுகிறது என்று விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் ரோஹண புஸ்பகுமார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபோக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் காலம் எதிர்வரும் மாதம் 5ஆம் திகதியுடன் நிறைவுபெறும். சிறுபோகத்தில் 6.4 இலட்சத்து ஹெக்ரேயர் நிலப் பரப்பில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் தற்போது உரம் மற்றும் எரிபொருள் சிக்கல் நிலைமை காணப்படும் பின்னணியில் சிறுபோக விவசாயத்துக்காக 3.57 லட்சம் ஹெக்ரேயர் நிலப்பரப்பு மாத்திரமே விவசாயத்துக்காகப் பண்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம)

# சத்துணவுகள் விலையுயர்வு: குறைவடைகிறது கொள்வனவு

கொழும்பு, ஜூன் 6

முட்டை, கோழி இறைச்சி, திரவப் பால் ஆகியவற்றின் விலை அதிகரிப்பால் அதனைக் கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைகிறது. இதனால் ஊட்டச்சத்துத் தொடர்பில் மற்றுமொரு சிக்கல் நாட்டில் உருவாகவுள்ளது என விவசாயத் துறை அமைச்சு கவலை வெளியிட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் தற்போது பல பண்ணைகள் நாட்டில் மூடப்பட்டு வருகின்றன. அத்துடன் கோழித்தீவனம் மற்றும் மூலப்பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளதால் சந்தையில் முட்டை, கோழி இறைச்சி, திரவப்பால் ஆகியவற்றின் விலை உயர்வடைந்துள்ளது. இந்த நிலையில் இவற்றைக் கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்துள்ளமையால் நாட்டில் போஷாக்குச் சிக்கல் மேலெழும் நிலை தோன்றியுள்ளது என விவசாயத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# சிறுவர்கள் மத்தியில் பரவும் புதிய வைரஸ்

கொழும்பு, ஜூன் 6

நாட்டில் தற்போது சிறுவர்கள் மத்தியில் பரவி வரும் கை, கால், வாய் தொடர்பான வைரஸ் நோய் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என்று மேல் மாகாண முன்பள்ளிப் பிரிவின் பணிப்பாளர் மஹிந்த கொடித்துவக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். முன்பள்ளியில் சிறுவர்கள் மத்தியில் இந்த வைரஸ் தாக்கத்தின் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக உள்ளூர் சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார். (எ-இ)




நேற்று பொன்.சிவகுமாரனின்ர நினைவு தினம் வழக்கம்போல கம்பஸிலையும் நடந்தது. இப்பிடி ஒரு நினைவுநாளெண்டால், புலனாய்வுக்காரர் வேற வேற உடுப்புகளோட கம்பஸூக்கு முன்னால, பின்னால எண்டு கண்கொத்திப் பாம்பு மாதிரி நிப்பினம். எம்.ஜி.ஆர். கன்னத்தில ஒரு மச்சத்தை ஒட்டிட்டு, அதை மாறுவேசம் எண்டு நம்பிற மாதிரி இந்தப் புலனாய்வுக்குஞ்சுகளும் உடுப்பின்ர கலரை மாத்தினால் தங்களை ஆரும் அடையாளம் காணமாட்டினம் எண்டு நம்புகினம். அதோட கம்பஸ் செக்கியூரிட்டிமாரும் உள்ளுக்க கண்டபடி ஆரும் போய்வராமல் பாப்பினம். சிலவேளையில கம்பஸ் பெடியள்கூட உள்ளுக்கபோக ஏலாமல் செக்கியூரிட்டிமார் கேற்றை இறுக்கிப் பூட்டிவைச்ச சம்பவங்கள் எல்லாம் தாராளமா நடந்திருக்கு.

இப்பிடிப்பட்ட நிலையில நேற்று சிவகுமாரனுக்கு அஞ்சலி முடிஞ்ச கொஞ்சநேரத்தில அந்த இடத்துக்கு மோட்டர் சைக்கிளில ரண்டுபேர் முறுக்கிக் கொண்டு வந்திருக்கினம். ஆக்களைப் பாத்த உடனேயே அவைக்கும் கம்பஸூக்கும் சேர்மதி இல்லையெண்டு விளங்கிட்டுது. வந்தவை பொம்பிளைப்பிள்ளையளுக்கு கிட்டப்போய் இன்னும் அக்சிலேட்டரை இறுக்கி முறுக்கி பயப்பிடுத்த, அந்தப் பிள்ளையள் அங்க இருந்து பயத்திலஓட வெளிக்கிட்டிருக்கினம். அந்தநேரம் மோட்டர் சைக்கிளில இருந்து இறங்கின ஒருத்தன், கம்பஸ் மாமரத்தில காய்ச்சிருந்த மாங்காயளைப் பிடுங்கி அந்தப் பிள்ளையளுக்கு எறிஞ்சிருக்கிறான். அதுக்குப் பிறகும் சும்மா நிக்காமல் ஒரு பொம்பிளப் பிள்ளைக்கும், பெடியன் ஒருத்தனுக்கும் ஹெல்மெட்டாலயும் அடிச்சிருக்கிறான். இவ்வளவு நடந்த பிறகும் பெடியள் சும்மா இருப்பாங்களோ? சேட்டை விட்ட ஆளுக்கு முறையாய் 'பூசை' குடுத்திட்டு, துணைவேந்தருக்கும் அறிவிச்சிட்டு, பொலிஸூக்கு போன் எடுத்தால், அவை எடுக்கவேயில்லை. இதெல்லாத்தையும் மாறுவேசம் போட்ட புலனாய்வுக்காரரும் பார்த்துக்கொண்டு இருந்திருப்பினம். அவையும் ஒருத்தருக்கும் அறிவிக்கேலை. கம்பஸ் செக்கியூரிட்டிமாரும் இவ்வளவு பிரகண்டம் நடந்தும் எட்டியும் பாக்கேலை. இதுவே கம்பஸ் பெடியள் மாவீரர் நாளுக்கு விளக்கு கொளுத்த வெளிக்கிட்டால், நூற்றுக்கணக்கில பொலிஸ் குவிஞ்சிருக்கும். உள்ளுக்க ஒருத்தரும் போகஏலாதபடி செக்கியூரிட்டிகள் மெயின்கேற்றை இழுத்துப் பூட்டியிருப்பினம்.

இதுக்கிடையில பிடிபட்டிருந்த சேட்டைமன்னன், திமிறிக்கொண்டு கம்பஸூக்கு வெளியில பாய்ஞ்சிட்டான். எண்டாலும் பிறகும் ஆளைக் கலைச்சுப்பிடிச்சு, ஒருமாதிரி ஆயிரத்தெட்டுத்தரம் கோல் பண்ணி, பொலிஸை வரச் செய்து, அவனை அரஸ்ட் பண்ண வைக்கிறதுக்குள்ள, பெடியளுக்கு போதும் போதும் எண்டாகிட்டாம். அதுவும் துணைவேந்தர் வந்ததாலதான் பொலிஸ் அங்க வந்ததாம். அவர் வராட்டி பொலிஸ் வராமலேயே போயிருக்கும்.

இத்தனைக்கும் கம்பஸ் பெடியள் அந்தச் சேட்டை மன்னனை பிடிச்சு "எதுக்கடா உள்ளுக்க வந்தனீ?" எண்டு கேக்க, கம்பஸ் செக்கியூரிட்டி ஒராளின்ர பேரைச் சொல்லி, அவரின்ர சிநேகிதம் எண்டதால உள்ளுக்க வந்தன் எண்டு சொல்லியிருக்கிறான். ஆளைப் பிடிச்சுக் கொண்டு போன பொலிஸ், கொஞ்சநேரத்தில 'ஆள் ஒரு வாள்வெட்டுக் குரூப் கேஸ்' எண்டு கம்பஸ் பெடியளுக்குச் சொல்லியிருக்கினம். 'இப்பிடி வாள்வெட்டுக் குரூப் எல்லாம் கம்பஸூக்குள்ள சுதந்திரமா வந்து போற அளவுக்கு இருக்குது கம்பஸ் செக்கியூரிட்டிமாரின்ர, பாதுகாப்பு' எண்டு கம்பஸ் பெடியள் ஆதங்கப்படுகினம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சியில் தொடர்கின்றது ஈழத் தமிழர்கள் போராட்டம்

சென்னை, ஜூன் 6

**திருச்சி தமிழ்நாடு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள், தங்களை விடுதலை செய்யக்கோரி நேற்று 17ஆவது நாளாகவும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.**

17 பேரே இவ்வாறு உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தண்ணீரை மட்டும் அருந்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அவர்கள், தங்களை விடுவிக்காவிட்டால் கருணை கொலை செய்ய வேண்டும் என்றும் தங்களுடைய உடல் உறுப்புகளை தமிழ்நாட்டு மக்களுக்கு தானம்செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருச்சி சிறப்பு முகாமில் உள்ள 104 இலங்கைத் தமிழர்கள் உள்ள நிலையில், அவர்கள் அனைவரும் இணைந்து நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

இதுவரை எந்த அரசு அதிகாரிகளும் தங்களுடைய போராட்டம் தொடர்பில் எந்தவிதமான கரிசனையும் கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டும் இலங்கைத் தமிழர்கள், உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் நிலைமை மோசமாகிக் கொண்டு செல்கின்றது என்றும் தெரிவித்தனர். (எ-இ)



வலி. கிழக்கு சபை ஏற்பாட்டில்

## தியாகி சிவகுமாரனின் 48ஆவது ஆண்டு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 6

தியாகி பொன். சிவகுமாரனின் 48ஆவது ஆண்டு அஞ்சலி நிகழ்வுகள் உரும்பிராயில் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றன.

பிரதேசசபையின் அவைத் தீர்மானத்தின் பிரகாரம், நேற்றுக் காலை உரும்பிராயிலுள்ள தியாகி பொன். சிவகுமாரன் உருவச்சிலை வளாகத்தில் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலி நிகழ்வில் பொது ஈகச் சுடரை தியாகி பொன். சிவகுமாரனின் சகோதரி சிவகுமாரி ஏற்றினார்.

தியாகி சிவகுமாரனின் சிலைக்கான மலர் மாலையை நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அணிவித்தார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். மலரஞ்சலியை அடுத்து தமிழ்த் தேசியத்தில் சிவகுமாரனின் பங்கு பற்றி உரைகள் நிகழ்த்தப்பட்டன. (எ-இ)

## தியாகி சிவகுமாரனுக்கு முன்னணியினர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 6

தியாகி பொன். சிவகுமாரனின் 48ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. உரும்பிராயிலுள்ள நினைவிடத்தில் நேற்று நண்பகல் 12 மணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

தொடர்ந்து முன்னணியினரால் பொன். சிவகுமாரனின் கல்லறையிலுள்ள இடத்திலும் நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது. (ம-20)





## யாழ். போதனா மருத்துவமனைக்கு இந்தியாவால் மருந்துப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். போதனா மருத்துவமனைக்கு இந்திய அரசாங்கத்தால் உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

இந்த மருந்துப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் யாழ்ப்பாண போதனா மருத்துவமனை பணிப்பாளர் ஆ.நந்தகுமாரிடம் கையளித்தார்.

நாட்டில் தற்போது மருந்துப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக யாழ். போதனா மருத்துவமனை நிர்வாகம் இந்திய துணைத் தூதரகத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்தப் மருத்துவப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ச-20)

கொழும்புத்துறை கொலை வழக்கு

# சாவுத்தண்டனை விதிக்கப்பட்ட இரு சந்தேக நபர்களும் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறையில் கொலைச் சம்பவம் தொடர்பில் எதிரிகள் இருவருக்கு விதிக்கப்பட்டிருந்த சாவுத் தண்டனை தள்ளுபடி செய்யப்பட்டு, அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி இரவு கொழும்புத்துறையைச் சேர்ந்த கடற்றொழிலாளியான மார்க்கண்டு சிவராசா என்பவர் தனது வீட்டுக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

சடலத்தில் காயங்கள் காணப்பட்ட நிலையில் புலன் விசாரணை நடத்திய யாழ்ப்பாண குற்றப் பிரிவு பொலிஸ் அதிகாரிகள் இறந்தவரின் மனைவியையும், சக கடற்றொழிலாளியான நண்பர் ஒருவரையும் கைது செய்தனர்.

இறந்தவரின் வீட்டின் பின்புறத்தில் இருந்து கொலைக்கு உபயோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட கத்தி, மண்வெட்டி என்பன கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்ற சுருக்கமுறையற்ற விசாரணையின் பின் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜெ.விஸ்வநாதன் முன்னிலையில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு, இரண்டு எதிரிகளுக்கும் எதிரான கொலைக்குற்றச்சாட்டு அரச தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று தீர்ப்பு வழங்கப்பட்டதுடன், இருவருக்கும் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து எதிரிகளான கமலநாதன் கங்காதரன், சிவராசா சுமதி ஆகிய இருவரும் தமது சட்டத்தரணிகள் எஸ்.சிவநேசன், பி.தவபாலன் ஆகியோர் மூலம் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தனர்.

மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் பந்துல கருணாரத்ன, ஜீ.குருசிங்க ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மேன்முறையீடுகளை ஆதரித்து, சட்டத்தரணி எஸ்.பஞ்சாட்சரத்தின் அனுசரணையுடன் மூத்த சட்டத்தரணி என்.ஶ்ரீகாந்தா வாதாடினார்.

இருதரப்பு வாதங்களின் பின்னர் தீர்ப்பு வழங்கிய மேன்முறையீட்டு நீதியரசர்கள், அரச தரப்பு சாட்சியத்தில் சில முக்கியமான விடயங்களில் காணப்படும் திட்டவட்டமான முரண்பாடுகளை புறம்தள்ளமுடியாது எனத் தெரிவித்து மேல் நீதிமன்றம் வழங்கிய குற்றத்தீர்ப்பையும் சாவுத் தண்டனையையும் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தனர். (எ-26)



தென்னிந்தியத் திருச்சபையின்

## வட்டுக்கோட்டை பேராலயம் சீரமைக்கப்பட்டு திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் வட்டுக்கோட்டை பேராலயம் மறுசீரமைக்கப்பட்டு, நேற்று காலை 9 மணியளவில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜாவால் திறந்து வைக்கப்பட்டது. (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கராஜவனம் சென்ற குடும்பப் பெண் மாயம்

கொழும்பு, ஜூன் 6
இரத்தினபுரி, கொலன்ன - சூரியகந்த ஹிமிதிரி பிரதேசத்தின் ஊடாக சிங்கராஜ வனத்துக்குள் சென்ற பெண்ணொருவர் கடந்த 3 ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளார் என்று சூரியகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சூரியகந்த ஜீ.ஜீ.பிரிவில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தாயான 45 வயதான பெண்ணே காணாமற் போயுள்ளார். சிங்கராஜ வனத்தில் இயற்கையாக விளைந்துள்ள ஏலக்காய்களை பறிப்பதற்காக சென்றபோதே இவர் காணாமற் போயுள்ளார். இந்தப் பெண் தனது கணவன் மற்றும் மகனுடன் வனத்துக்குள் சென்று ஏலக்காய் பறித்துக்கொண்டு நடந்து சென்றபோது பாதை மாறிச் சென்றுள்ளார் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், இராணுவத்தினரின் உதவியுடன் பெண்ணைத் தேடும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# சிவசிதம்பரத்தின் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
அமரர் மு.சிவசிதம்பரத்தின் (நல்லூர் சிவா) 20 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. நெல்லியடி சந்தியில் அமைந்துள்ள அவரது சிலைக்கு மலர் மாலை அணிவித்தும் மலர் அஞ்சலி செலுத்தியும் நினைவேந்தல் மேற்கொண்டனர். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ)

# கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 6
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணேசவரம் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தெல்லிப்பழைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்குச் சென்று சோதனை மேற்கொண்டபோது அவர்களிடம் இருந்து 50 மில்லிகிராம் மற்றும் 80 மில்லிகிராம் கஞ்சா கைப்பபற்றப்பட்டது. இதனையடுத்து 22 மற்றும் 23 வயதான இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் இருவருக்கு எதிராகவும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
(ம-14-125)

# கஞ்சாவுடன் — இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 6
ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரத்தில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.
அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரத்தில் கஞ்சாவை உடைமையில் வைத்திருப்பதாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது ஒரு கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து 28 வயதான இளைஞரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்ததோடு அவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (ம-14-125)

# போதைப்பொருள்களை ஒழிக்காமல் சிறுவர்களை பாதுகாக்க முடியாது!

கொழும்பு, ஜூன் 6
**போதைப்பொருளையும் போதைப்பொருள் கலாசாரத்தையும் இல்லாது அழிக்கும் வரையில், சிறுவர்களின் பாதுகாப்பை அவர்களுக்கு ஏற்ற சூழலை உறுதிப்படுத்தமுடியாது -என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.**



பண்டாரகம - அட்டுலுகம பிரதேசத்தில் கடந்த மாதம் காணாமற்போன சடலமாக மீட்கப்பட்ட சிறுமி ஆயிஷா வீட்டுக்கு நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேரில் சென்று ஆறுதல் தெரிவித்துள்ளார்.
அத்துடன் ஆயிஷாவின் குடும்பத்துக்கு நிதியுதவியைக் கையளித்தது டன் எதிர்காலத்தில் அவர்களுக்குப் பக்கபலமாக இருப்பேன் எனவும் உறுதியளித்துள்ளார்.
இதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே சஜித் இவ்வாறு தெரிவித்தார். போதைப்பொருள் அச்சுறுத்தலால் பூக்கொத்தைப் போல மேலும் ஒரு சிறுமி துரதிர்ஷ்டவசமாகக் கொல்லப்பட்டுள்ளார். போதைப்பொருள் என்ற பேரழிவு ஒழியும் வரை இதுபோன்ற அவலங்கள் ஓயாது. தற்போது தேசியப் பாதுகாப்பு என்பதைச் சவாலுக்கு உட்படுத்தும் வகையில் ஆங்காங்கே கொலைகள் இடம்பெறுவதையே காணக்கூடியதாகவுள்ளது - என்றார். (ம-ச-இ)



# அனுமதியின்றி மரக்குற்றிகளை வைத்திருந்த நபரொருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 6
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பால் பண்ணைப் பகுதியிலுள்ள மரக்காலையில் அனுமதிப்பத்திரமின்றி மரக்குற்றிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.
அனுமதிப்பத்திரமின்றி மரக்குற்றிகளை வைத்திருப்பதாக யாழ்ப்பாணம் வனவள பாதுகாப்புத் திணைக்களத்துக்குக் கிடைத்த தகவலுக்கமைய சிறப்பு அதிரடிப்படையின் உதவியுடன் பால் பண்ணைப் பகுதிக்கு விரைந்த வனப்பாதுகாப்புத் திணைக்களத்தினர் குறித்த பகுதியை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
இதன்போது சமண்டலை, வேம்பு, மருது, பலா போன்ற மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன. இதனையடுத்து 43 வயதான சந்தேகநபர் ஒருவரை வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினர் கைது செய்ததோடு அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-14-125)

# வீடொன்றில் இருந்து கஞ்சா, பணம் மீட்பு

## சந்தேகநபர்கள் மூவர் கைது

வடமராட்சி - திக்கம் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து கஞ்சா மற்றும் பணம் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன என வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த பகுதியிலுள்ள வீட்டை சோதனையிட்டபோது புதைத்து வைக்கப்பட்ட நிலையில் ஒரு கிலோ 90 கிராம் கஞ்சா மற்றும் 40 ஆயிரம் ரூபா பணம் ஆகியவை கைப்பற்றப்பட்டன.
இந்த நிலையில் கஞ்சாவை வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அதே பகுதியைச் சேர்ந்த மூவரையும் பொலிஸார் கைதுசெய்தனர். அவர்கள் 22, 27 மற்றும் 25 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-26)

# மோட்டார் சைக்கிளில் திடீரென பற்றியது தீ!



யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியிலுள்ள வாகன திருத்துமிடம் ஒன்றில் மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.
குறித்த வாகனத் திருத்துமிடத்தில் ஒட்டு வேலைக்காக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒட்டு வேலை இடம் [illegible] மோட்டார் சைக்கிளின் [illegible] முழுமையாக தீயில் எரிந்து நாசமாகின. (ம-14-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆம் திருத்த வரைவில் தமிழர் நலன்கள் இல்லை

## சிங்களதேசத்தை ஜனநாயகமாக்கும் நடவடிக்கை என அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 6

**சிங்கள தேசத்தை ஜனநாயகப்படுத்தும் திட்டமிட்ட நகர்வுதான் அரசமைப்பின் 21ஆவது திருத்தம். அதில் தமிழர் நலன்கள் சார்ந்த சிந்தனை இல்லை. ஆதலால் இந்தத் திருத்தத்துக்கு தமிழ்த் தேசியக் கட்சி ஆதரவு வழங்கக்கூடாது. மீறி ஆதரவு வழங்கினால் அவை மக்கள் முன்னிலையில் அம்பலப்படும் - என்று தெரிவித்தார் அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம்.**

யாழ். ஊடக மையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் தென் இலங்கையில் சூடுபிடித்துள்ளன.

ராஜபக்சக்களின் இருப்பிலேயே பொதுஜன பெரமுன தங்கியிருப்பதால் அதிகாரங்களைக் குறைத்து ராஜபக்சக்களை பலவீனப்படுத்த பொதுஜன பெரமுனவினர் விரும்பவில்லை. மகாநாயக்கர்கள் 13ஆவது திருத்தமும், விகிதாசார பிரதிநிதித்துவமும் இருப்பதால் தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் பலம் பெற்று விடுவார்களோ என அஞ்சி ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதை ஏற்கவில்லை. அஸ்கிரிய, மல்வத்த பீடங்களின் பீடாதிபதிகள் இதனை நேரடியாகவே நீதி அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

மறுபக்கத்தில் எதிர்க்கட்சிகள் 21ஆவது திருத்தத்தை ஆரம்பமாகக் கொண்டு ஜனாதிபதி முறை முழுமையாக நீக்கப்படல் வேண்டும் என்றே வற்புறுத்துகின்றனர். இதனை ஒரு வகையில் பெருந்தேசிய வாதத்தின் லிபரல் முகத்துக்கும், பெருந்தேசியவாதத்தின் இனவாத முகத்துக்கும் இடையிலான போராட்டம் எனலாம்.

தென்னிலங்கையின் போட்டி அரசியல் எவ்வாறாவது இருந்துவிட்டுப் போகட்டும். 21ஆவது திருத்தம் அடிப்படையில் சிங்கள தேசத்தை ஜனநாயகப்படுத்துவதற்கான திருத்தம். இலங்கைத் தீவை ஜனநாயகப்படுத்துவதற்கான திருத்தம் அல்ல. 19ஆவது திருத்தத்தில் தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கான பிரதிநிதித்துவம் திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. 21ஆவது திருத்தத்தில் அவைகூட இல்லை.

**தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு...**

சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினராகிய நாம் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் பின்வரும் இரு கோரிக்கைகளை 21ஆவது திருத்தம் தொடர்பாக முன்வைக்கின்றோம்.

1. 21ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்படுகின்ற அரசமைப்புப் பேரவையிலும், சுயாதீன ஆணைக்குழுக்களிலும் போதிய பிரதிநிதித்துவம் தமிழ் மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.
2. குறைந்தபட்சம் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களிலாவது தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தமிழ்ப் பிரதிநிதிகளிடம் இருத்தல் வேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் அரசாங்கம் ஏற்காவிட்டால் 21ஆவது திருத்தத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆதரிக்கக் கூடாது. இதனைத் திட்டவட்டமாக அரசாங்கத்திடம் தெரிவிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தப் பணியை மேற்கொள்ளாது வழமைபோல ரணில் அரசாங்கத்தை தாங்கிப் பிடிக்க வேண்டும் என்பதற்காக ஆதரவு கொடுத்தால் தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பகிரங்கமாக அம்பலப்படுத்துவோம் என்பதையும் வலியுறுத்திக் கூறவிரும்புகின்றோம் - என்றார். (ம)



## மக்களைத்தான் பாதுகாருங்கள்!


*ஜனாதிபதியை அல்ல*
*திஸ்ஸ எம்.பி. சாட்டை*

கொழும்பு, ஜூன் 6

அரசமைப்பின் '21'ஆவது திருத்தம் அத்தியாவசியமானது என்ற எமது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. ஆனால், நாம் இப்போது பாதுகாக்க வேண்டியது நாட்டு மக்களையே தவிர ஜனாதிபதியை அல்ல என்பதைப் புரிந்து கொண்டு, உரியவாறான திருத்தங்களைக் கொண்டுவரும் பட்சத்தில் 21ஆவது திருத்தத்துக்கு முழுமையாக ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் காணப்பட்ட அனைத்து ஜனநாயகக் கூறுகளும் 21 ஆவது திருத்தத்தில் உள்வாங்கப்பட வேண்டும். தனியொரு நபரைப் பாதுகாப்பதற்காக ஒட்டுமொத்த நாட்டையும் படுபாதாள குழிக்குள் தள்ளுவது ஏன்? எனவே குறைபாடுகளை நிவர்த்திசெய்து, 21ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவோம் -என்றார். (ம-ய)



## இரட்டைக் குடியுரிமையுடன் 10 பேர் நாடாளுமன்றில்

கொழும்பு, மே 6

இரட்டை குடியுரிமை உடைய 10 அரசியல்வாதிகள், தற்போதைய நாடாளுமன்றத்தில் உறுப்பினர் பதவிகளை வகிக்கின்றனர் என ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

21 ஆவது திருத்தச்சட்ட வரைவில் உள்ள 'இரட்டைக் குடியுரிமை தடை' என்ற ஏற்பாட்டை நீக்கிக்கொள்வதற்கு இவர்கள் தீவிரமாகச் செயற்படுகின்றனர் என்றும், அந்த 10 பேரில் மலையக அரசியல்வாதியொருவரும் உள்ளடங்குகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

21ஆவது திருத்தம்

## ஜனாதிபதியின் அதிகாரத்தில் தொடர்ந்தும் இழுபறிநிலை

கொழும்பு, ஜூன் 6

21 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் தொடர்பான மூன்று முக்கியமான விடயங்கள் குறித்து இழுபறி நிலை காணப்படுகின்றது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதி, பிரதமர், நீதியமைச்சர் ஆகியோருக்கு இடையில் இந்த விடயங்கள் குறித்து ஆராய்வதற்கான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை தன்வசம் அவசியம் வைத்திருக்க வேண்டுமா? என்பது குறித்தும், பிரதமரை நீக்குவதற்கான ஜனாதிபதியின் அதிகாரம், அமைச்சர்களை நியமிப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரம் என்பன குறித்தும் இன்னும் இணக்கப்பாடு ஏற்படவில்லை.

இவற்றுக்கு அப்பால் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ளவர்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்வது குறித்த விடயமும் பிரச்சினைக்குரியதாகக் காணப்படுகின்றது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ளவர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பதைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று [illegible] சிலர் கடுமையாக [illegible] தெரியவருகின்றது. (ம)

## 21ஐ நடைமுறைப்படுத்த மக்கள் ஆதரவே தேவை

### நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடையை வெற்றிகொள்ள அனைத்து மக்களின் ஒத்துழைப்பும் தேவை. புதிய அரசமைப்பு விரைவில் உருவாக்கப்படும்.

இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சிவில் மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிகளைச் சந்தித்து கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

21ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகளை நீக்கிக் கொள்வதற்கு மக்களின் ஆதரவு முக்கியமானதாகும்.

புதிய அரசமைப்பு வெகுவிரைவில் உருவாக்கப்படும். அரசியல் உறுதித்தன்மையை மேம்படுத்தி பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக அரசமைப்பின் 21ஆவது திருத்தம் விரைவாக நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டும்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் ஊடாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றின் சுயாதீனத் தன்மை மட்டுப்படுத்தப்பட்டதுடன், தேசிய பெறுகை ஆணைக்குழு, கணக்காளர் நாயகம் ஆணைக்குழு ஆகியன இரத்துச் செய்யப்பட்டன.

21 ஆவது திருத்தம் ஊடாக ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் பலப்படுத்தப்பட்டு தேசிய பெறுகை மற்றும் கணக்காளர் நாயகம் ஆகிய ஆணைக்குழுக்கள் மீளஸ்தாபிக்கப்படும்- என்றார்.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சை மாத்திரம் ஜனாதிபதி வகித்தல், அமைச்சரவை நியமனத்தின்போது ஜனாதிபதி பிரதமரின் ஆலோசனையைப் பெறல், பிரதமரை நீக்கும் அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்து நீக்கி அதனை நாடாளுமன்ற பெரும்பான்மைக்கு உட்படுத்தல், அரசமைப்பு பேரவை நடுநிலை வகித்தல் உள்ளிட்ட 4 யோசனைகளை முஸ்லிம் சிவில் அமைப்பினர் நீதியமைச்சரிடம் முன்வைத்தனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வதந்திகளும் வதைகளும் ...

பொருளாதார நெருக்கடியால் வாழ்க்கையை எப்படி நகர்த்துவது என்று தெரியாமல் மக்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். அடுத்தவேளை உணவை உறுதிப்படுத்திக் கொள்வதே விரைவில் பெரும்பாடாகும் சூழல்தான் இருக்கின்றது. போதாக்குறை ஆட்சியாளர்களும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளுக்குப் பதிலாக, மின் கட்டணம் உயரப்போகின்றது, அரிசி இன்னும் இரண்டு வாரங்களில் இல்லாமற்போய்விடும் என்று புதிய பிரச்சினைகள் பூதாகரமாக வரப்போவதாக மக்களை தினம் தினம் அச்சமூட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் தென்னிலங்கையில் தலையெடுத்துள்ள துப்பாக்கிச்சூட்டுக் கொலைக்கலாசாரம், கொள்ளைகள் என்பனவும் மக்களின் உயிருக்கான உத்தரவாதத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளன. ஈஸ்டர் தாக்குதலை முன்னிறுத்தி தேசிய பாதுகாப்பின் காவலன் தாமே என்று மார்தட்டி ஆட்சிக்கு வந்த கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்திலேயே இவை எல்லாம் நடக்கின்றன.

இதுபோதாது என்று, அட்டுலுகமவில் பாத்திமா ஆயிஷா என்ற சிறுமி கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட பின்னர் வதந்திகளும் தம் பங்குக்கு மக்களை வதைக்கத் தொடங்கியுள்ளன. தற்போதைய நவீன தொடர்பாடல் யுகத்தில், சமூக ஊடங்கள் மூலம் இந்த வதந்திகள் வேகமாகப் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. "சிறுவர்களின் கண்கள், சிறுநீரகங்களை விற்பனை செய்யும் கும்பல்தான் இப்போது சிறுவர்களைக் கடத்துகின்றது. எனவே உங்கள் பிள்ளைகள் இப்படியான மனித உறுப்புகளைத் திருடும் கும்பலிடம் சிக்க வைத்துவிடாதீர்கள்'' என்று அக்கறையோடு சொல்வதாக வெளிப்பூச்சுக்குத் தோன்றுகின்ற இந்த வதந்திகள், எந்தவித அடிப்படை உண்மையும் இல்லாது வட்ஸப் குழுக்களில் பகிரப்படுகின்றன. ஆனால், பட்டினிக்கு இரையாகிவிடுவோமோ என்று அச்சமுறும் குடும்பங்களின் பீதியை இன்னும் அதிகரிப்பதே உண்மையில் இத்தகைய விஷமத் தகவல் பரப்புவர்களின் நோக்கம்.

அதுவும் தவணை விடுமுறை முடிந்து, பாடசாலைகள் மீண்டும் இன்று ஆரம்பிக்கவுள்ள சூழலில், இத்தகைய 'பிள்ளை பிடி' வதந்திகள் உண்டாக்கக்கூடிய உளப்பாதிப்பின் தாக்கம் மிகப்பெரியது. பாடசாலை முடிந்து, ஏதேனும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிள்ளை வீட்டுக்குச் செல்ல ஒரு நிமிடம் தாமதமாகிவிட்டாலும் கூட, இனிமேல் பெற்றோர் 'எங்கள் பிள்ளையை சிறுநீரகம் திருடும் கும்பல் கடத்திவிட்டதோ?' என்று பதறப்போகிறார்கள். இன்னும் பல பெற்றோரோ, தங்கள் அலுவலகங்களுக்கு விடுமுறையைப் போட்டுவிட்டு, பாடசாலை நேரம் முடியும் முன்பாகவே தங்கள் பிள்ளைகளின் பள்ளிக்கு முன்னால் தவமிருக்கவும் கூடும். ஏதேனும் புதிய வாகனம் பிள்ளைகளுக்கு அருகில் தற்செயலாக நின்றால்கூட, பிள்ளைபிடிகாரரின் வாகனமோ என்றெண்ணி, சிறுவர்கள் பதறித் துடித்து பதகளிக்கவும் நேரிடலாம்.

கிட்டத்தட்ட இதேசாயலில் தான் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பாணைப் பறித்தார்கள், மிளகாய்த்தூளை பிடுங்கினார்கள், ஐஸ்கிறீமை பறித்தார்கள் என்ற வதந்திகளும். யாரோ சிலர் 'நாடு போகிற போக்கில் இனிமேல் பாணைக் கூட களவெடுப்பார்கள்' என்று கற்பனை செய்து பேஸ்புக்கில் போட்ட பதிவுகளை வைத்தே, சிலர் இத்தகைய 'களவு' வதந்திகளைப் பரப்பி, 'இனிமேல் நகை, நட்டுகளுடன் மட்டுமல்ல, சாதாரண பாண், பணிஸ் வாங்கிக்கொண்டு கூட அச்சமில்லாமல் போய்வர முடியாத சூழல்' என்ற மாயையை உண்டுபண்ணி, மக்கள் மீது ஒரு உளவியல் போரை ஏவி, அவர்களின் நம்பிக்கைகளை, மீண்டெழும் வலிமையைச் சிதைக்க நினைக்கிறார்கள்.

இத்தகைய தருணத்தில்தான், மக்கள் உறுதியுடனும்,விழிப்புடனும் இருக்கவேண்டும். இப்போதிருப்பதைவிடவும் கொடும் பொருளாதார நெருக்கடி காலத்திலும் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு வாழ்ந்தோம் என்றால், அதற்குக் காரணம் அப்போது நம்மிடமிருந்த நம்பிக்கையும், கூட்டுறுதியும் தான். அதைச் சிதைக்கும் வேலைகளே பரவலாக நடந்து வருகின்றன. எனவே எந்தச் செய்தியை அறிந்தாலும், அதன் உண்மைத் தன்மையை சரிவரக் கணித்து, அது வதந்தியா,இல்லையா என்பதில் தெளிவடைய வேண்டும். அத்தோடு சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் இதுபோன்ற ஆதாரமற்ற, அச்சமூட்டும் தகவல்களை ஒவ்வொருவரும் நூறு சதவீதம் மெய்ப்பு பார்த்து, அது உண்மையென உறுதிப்படுத்தும் வரை பகிராமல் பொறுமை காத்தாலே இத்தகைய வதந்திகள் வந்த வேகத்திலேயே மறைந்து போகச்செய்துவிடலாம்.

### நாளொரு நல்வார்த்தை

பெரிய பெரிய சாதனைகளெல்லாம்
செய்து முடிக்கப்படுவது
ஆழ்ந்த மௌனத்தால்தான்.
—எமர்சன்




# மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு மன்னிப்புக் கோரியது கடற்படை!

**மன்னார், ஜூன் 6**

**மன்னார், பேசாலைப் பகுதியில், மீனவர்கள் மீது தம்மால் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மன்னிப்புக் கோரியுள்ளது கடற்படை.**

மன்னார், பேசாலையில் இருந்து கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லத் தயாரான போது கடற்படையினர் அவர்களின் படகுகளைச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். இதையடுத்து மீனவர்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மீனவர் ஒருவர் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர், சமரசத்தின் அடிப்படையில் ஏனைய மீனவர்கள் தொழிலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மாலை 5.30 மணியளவில் கடற்படையினர் அந்த இடத்துக்குச் சென்று மீனவர்களின் படகுகளை மீண்டும் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். அத்துடன், ஆள்கள் இல்லாத தீடை என்னும் பகுதிக்குச் சென்று அங்கு உடற்சோதனைகளை நடத்தியதுடன் பேசாலையில் கடற்றொழிலுக்குச் செல்ல முன்னர் கடற்படையுடன் மீனவர்கள் முரண்பட்டபோது எடுக்கப்பட்ட காணொலியை வைத்து ஆறு மீனவர்களை இனங்கண்டு அவர்களைத் தாக்கியுள்ளனர். இதையடுத்து அந்த ஆறு மீனவர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் இந்தச் சம்பவம் தொடர்பில் கடற்படையினருடனும், மீனவர்களுடனும் நேற்றுமுன்தினம் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போதே இந்தச் சம்பவத்துக்குக் கடற்படையினர் மன்னிப்புக் கோரியுள்ளனர். இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்றும் கடற்படை அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினரிடமும் மீனவர்களிடமும் உறுதியளித்தனர். (ம-ச-213)

# அனலைதீவு கடற்கரையில் மனித எச்சங்கள் மீட்பு!



யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம், அனலைதீவு கடற்கரையில் மனித எச்சங்கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

பிரதேசவாசிகள் இவ்வாறு மனித எச்சங்கள் கரையொதுங்குவதை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து, அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதுடன், அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். (ம-20.26)

**நாளை** 07.06.2022 செவ்வாய்க்கிழமை வைகாசி 24
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம்: 02.52 -04.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தினருடன் விருந்துக்குச் செல்வீர்கள். தாய்வழி உறவுகளின் உதவி உண்டாகும். மனம் விரும்பிய போக்கில் செயற்படுவீர்கள். விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**இடபம்:** எண்ணம் இன்று நிறைவேறும். குடும்பத்தினருடன் அமர்ந்து எதிர்காலம் பற்றி யோசிப்பீர்கள். குடும்பத்தினரின் நலனில் கவனம் செலுத்துவீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தினருக்காக பல வழிகளில் செலவு செய்வீர்கள். கையிருப்பில் ஒரு பகுதி கரையும். சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். வெளியூர் செல்வீர்கள்.

**கடகம்:** நினைத்ததை இன்று நிறைவேற்றுவீர்கள். எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். தந்தை வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். நீண்டநாள் எண்ணம் ஒன்று இன்று நிறைவேறும்.

**சிம்மம்:** குடும்பத்தினருடன் வெளியில் சென்று வருவீர்கள். தேவையற்ற செலவு அதிகரிக்கும். சிக்கனம் தேவை. குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நவீன பொருள்கள் வாங்குவீர்.

**கன்னி:** எதிர்பார்ப்பு நடந்தேறும். கேட்ட இடத்தில் இருந்து பணம் வரும். புதிய முயற்சி கை கொடுக்கும். நெருக்கடிகளில் இருந்து மீள்வீர்கள். எதிர்பார்த்த வருமானம் வரும். இனிய சம்பவம் நடந்து மகிழ்வீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். நண்பர்கள் உதவுவர். கவனமுடன் செயற்பட வேண்டியநாள். உங்கள் முயற்சியில் ஒன்று வெற்றி பெறும். நண்பர்களுடன் வெளியில் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** அறிவாற்றல் வெளிப்படும். நாளை செய்ய வேண்டிய முயற்சிகளுக்கு இன்றே திட்டமிடுவீர்கள். குடும்பத்தினரின்தேவைநிறைவேறும். பிள்ளைகளின் எதிர்காலத்துக்குரிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

**தனுசு:** பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. நீங்கள் நினைப்பதற்கு மாறாக நடக்க வாய்ப்புண்டு. சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவி கிடைக்காமல் போகும்.

**மகரம்:** குடும்பத்தினரை சந்தோஷப்படுத்துவீர்கள். நண்பர் ஆதரவால் நினைத்ததை அடைவீர்கள். குழப்பங்கள் விலகும். எதிரிகளை அடையாளம் காண்பீர்கள்.

**கும்பம்:** முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உடல்நிலையில் சங்கடம் விலகும். சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள். உறவினர் வருகை மகிழ்ச்சியை ஏற்படுத்தும். உங்களுக்கு எதிரானவர்களின் செயல்களை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** வேலைகளை இன்று ஒத்திப் போடுவீர்கள். குடும்பத்தினருக்காக செலவு செய்வீர்கள். அவசர வேலைகளை முடிப்பீர்கள். உடலும் மனமும் சோர்வு பெறும். குடும்பத்தினரின் ஆதரவு கூடும். சிந்தனை மேலோங்கும்.

# கோதுமை உற்பத்தி உக்ரைனில் வீழ்ச்சி!

## உணவுத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு ரஷ்யாவிடம் பணியுமா ஐ.ஒன்றியம்?



கீவ், ஜூன் 6

ரஷ்யப் படையெடுப்புக் காரணமாக உக்ரைனில் கோதுமை உற்பத்தி 40 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், உலகம் மிக விரைவில் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டி வரலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பியாவின் தானியக் களஞ்சியம் என்று அழைக்கப்படும் உக்ரைன், உலகில் கோதுமை உற்பத்தியில் முன்னோடியில் உள்ள நாடாகும்.. கோதுமைத் தேவையில் பல ஐரோப்பிய நாடுகளும் சுமார் 25 ஆபிரிக்க நாடுகளும் உக்ரைனை நம்பியே உள்ளன. இந்த நிலையில் ரஷ்யப் படையெடுப்புக் காரணமாக உக்ரைனில் கோதுமை உற்பத்தி 40 வீதம் வீழ்ச்சியடைந்தமையால் உலகம் வெகுவாகவே உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும், உலக அளவிலும் கோதுமைக்கான கேள்வி தற்போது மிகையாகவே அதிகரித்துள்ள நிலையில் இந்தப் பற்றாக்குறை இனி தீவிரமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு, உக்ரைனுக்கு நிகராக கோதுமை உற்பத்தியில் முன்னிலையில் உள்ள ரஷ்யாவிடம் இருந்து கோதுமை வாங்க வேண்டிய நிலைக்கு ஐரோப்பிய ஒன்றியம் தள்ளப்படும்.

அவ்வாறு ரஷ்யாவிடம் இருந்து கோதுமையை ஐரோப்பிய நாடுகள் கொள்வனவு செய்ய வேண்டுமாயின் அந்த நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக விதித்த பொருளாதாரத் தடைகளை தளர்த்த வேண்டிய நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# உக்ரைனின் 25 வீதம் ரஷ்யாவிடம் வீழ்ந்தது

மொஸ்கோ, ஜூன் 6

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையின் தொடர்ச்சியாக அந்த நாட்டின் 25 வீதமான நிலப்பரப்பை ரஷ்யா கைப்பற்றியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை உக்ரைனும் ஏற்றுக்கொண்டுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் முனைப்புக்களை மேற்கொண்டதை அடுத்து, அது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று தெரிவித்து உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி போர் தொடுத்தது. சுமார் 100 நாள்களைக் கடந்து இந்தப் போர் நீடித்து வருகின்றது. உக்ரைனின் பல பகுதிகள் ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. குறிப்பாக உக்ரைனின் கிழக்குப் பகுதிகளைக் கைப்பற்றிய ரஷ்யா, அதை கிளர்ச்சியாளர்களிடம் ஒப்படைத்துள்ளது. இதைவிட மரியுபோல் நகரம் ரஷ்யாவால் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. உக்ரைனின் இதர பகுதிகளிலும் தற்போது தீவிரமாகப் போர் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் தற்போதைய கணிப்பின்படி உக்ரைனின் 25 வீதமான நிலப்பரப்பு ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதை உக்ரைனும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், எம்மிடம் இருந்து பறிக்கப்பட்ட நகரங்கள் விரைவில் மீட்கப்படும். இந்தப் போரில் நிரந்தர வெற்றி பெற ரஷ்யாவை அனுமதிக்கமாட்டோம் என்று உக்ரைனின் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். (ம)

# உலக உணவு நெருக்கடி ஐரோப்பாவே காரணம்!

## ரஷ்ய அதிபர் புடின் குற்றச்சாட்டு

மொஸ்கோ, ஜூன் 6

உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கு மேற்கத்தேய நாடுகளே காரணம் என ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உக்ரைன்- ரஷ்யா போர் ஆரம்பமாகி 100 நாள்களைத் தாண்டியும் தொடர்கிறது. இதனால் உக்ரைனிலிருந்து சமையல் எண்ணெய், எரிபொருள் ஏற்றுமதி என வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. உணவுப்பொருள்கள் நெருக்கடிக்கு ரஷ்யாவே காரணம் என ஐரோப்பிய நாடுகள் மறைமுகமாக பேசி வருகின்றன.

ஆனால் உலகளாவிய உணவு சந்தையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிளையும் அது சார்ந்த பிரச்சினைகளையும் மேற்குல நாடுகள் ரஷ்யாவின்மீது திருப்பி விடுகின்றன.

ரஷ்யா மீது அவர்கள் விதித்த பொருளாதாரத் தடையே உலக சந்தையை மோசமாக்கியுள்ளது.

உக்ரைனிலிருந்து உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்வதை ரஷ்யா தடுக்கவில்லை. உக்ரைனிலிருந்து உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும் கப்பல்களுக்கு பாதுகாப்பான பாதையை வழங்க ரஷ்யா உறுதி அளிக்கும் என்றார். (ச-இ)

# பங்களாதேஷ் சேமிப்புக்கிடங்கில் பயங்கரத் தீ விபத்து

*35 பேர் உயிரிழப்பு; 450 பேர் காயம்*

டாக்கா,ஜூன் 6

இந்தியாவின் அண்டை நாடுகளில் ஒன்றான பங்களாதேஷிலுள்ள பிரதான துறைமுகத்துக்கு அண்மையிலுள்ள சேமிப்புக் கிடங்கொன்றில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில் 35 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தீயணைப்பு வீரர்கள் உட்பட சுமார் 450 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர். 30 ஏக்கர் பரப்பளவிலுள்ள குறித்த தனியார் சேமிப்புக் கிடங்கில் ஹைட்ரஜன் பெராக்சைடு உள்ளிட்ட இரசாயனங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. இந்தநிலையிலேயே திடீரென அங்கு பயங்கரத் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் அந்த நாட்டுப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ச-இ)

# இம்ரான்கான் மீது தேசத்துரோக வழக்கு

இஸ்லாமாபாத், ஜூன் 6

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது தேசத்துரோக வழக்கு தொடர அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானின் நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மாணம் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசு கவிழ்ந்தது.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஷபாஸ் ஷெரீப் பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்த நிலையில் இஸ்லாமாபாத்தில் கடந்த மாதம் நடந்த போராட்டத்தின்போது அரசு சொத்துக்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகக் கூறி முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது தேசத்துரோக வழக்குத் தொடர பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப.அருந்தவம்

# உணவுப் பற்றாக்குறைப் போரில் மாணவர்கள் எனும் போராளிகள்!



பாடசாலையானது மாணவர்களை சமூகத்தில் சிறந்த பிரஜையாகப் புடம்போடும் ஓர் உன்னத இடம் மட்டுமல்ல, மாணவர்கள் எதிர்காலத்தில் ஆரோக்கியமாகவும் தாமே தமது சொந்தக்காலில் நிற்கக்கூடிய ஆற்றல், அறிவு, திறன், பயிற்சி என்பவற்றைப் பெறக்கூடிய களமாகவும் அது அமைகிறது.

எதிர்வரும் காலத்தில் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகப் பேசப்படுகின்ற நிலையில், மாணவர்களையும் அவர்கள் சார்ந்த சமூகத்தினரையும் உணவுத் தட்டுப்பாட்டிலிருந்து காத்துக் கொள்வதற்கான அறிவு, ஆற்றல், பயிற்சி என்பன பாடசாலைகளினூடு வழங்கப்படவேண்டிய தேவை தற்காலத்தில் தவிர்க்கப்பட முடியாதவொன்றே.

உணவுத் தட்டுப்பாட்டை வெற்றிகரமாக எதிர்கொள்ள, உணவு உற்பத்தியை அதிகரித்தல், உணவு வீண்விரயத்தைத் தவிர்த்தல், உணவைப் பழுதடையாது பேணுதல். இந்த மூன்று முயற்சிகளையும் பாடசாலைகளின் ஊடாக இன்றைய இளம் சமூகத்துக்கு வழங்குவது காலத் தேவையானது.

பாடசாலைகள் சமூகத்தில் காணப்படும் முன்னேற்றகரமான இயல்புகளை வளர்ப்பதிலும் பின்டைவான இயல்புகளைக் களைவதிலும் காலவோட்டத்தில் சமூகத்தில் ஏற்படும் இடர்களுக்கு முகங்கொடுக்கும் ஆற்றலை வளர்ப்பதிலும் முன்னிற்கும் நிறுவனமாகும்.

மேலும் குறித்த காலத்தில் மக்களுக்கு ஏற்படும் இடர்களைக் களைவதற்கு வேண்டிய அறிவையும், தகவல்களையும் பிள்ளைகளினூடாக சமூகத்துக்குப் பரப்பும் உன்னத பணியைச் செய்யும் நிறுவனமாகவும் செயற்படவேண்டிய தேவையுமுண்டு.

அந்தவகையில், எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் மனித அன்றாட நுகர்வுக்கான உணவுத் தட்டுப்பாடு, போசாக்குமிக்க உணவு கிடைப்பதிலுள்ள இடர்நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு பாடசாலைகள் செயற்படவேண்டியது தற்காலத் தேவைதானே!

**"தமக்கு வேண்டிய உணவின் ஒரு பகுதியையேனும் தம்மால் உற்பத்தி செய்யமுடியும் என்ற மனப்பாங்கை மாணவர் மத்தியில் வளர்ச்சியடையச் செய்ய பாடசாலைகளில் அமைக்கப்படும் மாதிரி வீட்டுத்தோட்டங்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கக்கூடியன."**



## மாதிரி வீட்டுத்தோட்டம்

தமக்கு வேண்டிய உணவின் ஒரு பகுதியையேனும் தம்மால் உற்பத்தி செய்யமுடியும் என்ற மனப்பாங்கை மாணவர் மத்தியில் வளர்ச்சியடையச் செய்யவும், தமது வீட்டில் இதேபோன்றதொரு தோட்டம் ஒன்றை அமைத்துப் பராமரிக்கக்கூடிய அறிவு, ஆற்றல் என்பவற்றை வளர்த்தெடுப்பதற்கும் பாடசாலைகளில் அமைக்கப்படும் மாதிரி வீட்டுத் தோட்டங்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கக்கூடியன.



பல்வேறு விவசாய தொழில்நுட்ப உத்திகளையும் பாடசாலை மாதிரி வீட்டுத்தோட்டத்துக்கு பிரயோகிக்கும்போது அவற்றிலிருந்து பல்வேறு அறிவையும், திறன்களையும் மாணவர் பெறுவர். அதாவது நில வள முகாமைத்துவம் பருவத்துக்கேற்ப பயிர்த் தெரிவு, நீர்வள முகாமைத்துவம், பீடை முகாமைத்துவம், அறுவடைக்குப் பின்னரான

தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளிலும் அறிவு வளர்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படுகிறது. இதுமட்டுமன்றி காலத்தின் தேவையை அனுசரித்து வீட்டுத்தோட்ட விவசாயம் செய்யக்கூடிய ஓர் இளம் சந்ததியை உருவாக்க கால்கோளாகவும் இது அமையும்.

## வீண்விரயம் தவிர்த்தல்

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் உணவின் பல பகுதி மக்களால் நுகரப்படாமலே வீணாகிறது. உணவைச் சிந்துவது, உள்ளெடுப்பதற்காக எடுக்கப்பட்ட உணவின் ஒரு பகுதியை நுகராமலேயே கழிவுத் தொட்டிகளில் கொட்டுவது, தகுந்த போசாக்கு நிறைந்த உணவை அலட்சியம் செய்வது போன்ற செயற்பாடுகளில் மாணவர் ஈடுபடுவது தற்காலத்திலும் அதிகரித்தே இருக்கின்றது. இவற்றில் மாணவர் ஈடுபடாது அவர்களை முறைமைப்படுத்தவேண்டியது பாடசாலைகளின் கடமையாகும்.

மாணவர்களால் வீணாக்கப்படும் உணவு பிறர் உண்ணக்கூடியது என்பதனை மாணவர் புரிந்து கொள்ள வகைசெய்தல் வேண்டும். அநேக விவசாய விளைபொருள்கள் விரைவில் பழுதடையக்கூடியவையாகவும் போகத்துக்குரிய உற்பத்தியாகவும் காணப்படுகிறது. எனவே இவை பழுதடையாது பாதுகாக்கக்கூடிய நுட்ப

முறைகளையும் தகுந்தவாறான சேமிப்பு உத்திகள் பற்றிய அறிவையும் பாடசாலைகள் மாணவருக்கு வழங்கவேண்டும்.

## தற்சார்பு வாழ்வியல்

மாணவர்கள் தமக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்யக்கூடிய வகையில் வழிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தமக்கு வேண்டிய உணவு, எரிசக்தி, மருத்துவம் போன்றவற்றுக்கு தம்மைச் சூழவுள்ள பிரதேச வளங்களைப் பயன் படுத்தும் ஆற்றலை வளர்த்தெடுக்கவேண்டும்.

தமக்கு வேண்டிய உணவைத் தாமே உற்பத்தி செய்யும் திறனை எல்லோரும் வளர்த்துக்கொள்ளவேண்டும். தமக்கு கிடைக்கும் ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் வீட்டுத் தோட்ட முயற்சியில் ஈடுபடவேண்டும்.

இன்று எம்மிடமிருந்து பெரும்பாலான பாரம்பரிய விதையினங்கள் அழிந்துகொண்டு வருகின்றன. இந்த விதைகளைத் தேடி மீட்டெடுத்தல் வேண்டும். பாடசாலை மாணவர்களே நாட்டுப்புற விதைவங்கிகளை உருவாக்கி, இந்த விதைகளை சமூகத்தில் பலருக்கும் பகிர்ந்து இந்த விதைகள் பரவலடையச் செய்தல் வேண்டும். இந்த மரபார்ந்த விதைகளே எம் மண்ணுக்கும், சூழலுக்கும், உடலுக்கும் ஏற்புடையவை. இதை முழுமையாகச் செயற்படுத்தக்கூடிய திறமை மாணவர்களுக்கு உண்டு.

## மாற்று எரிசக்திப் பயன்பாடு

இன்று நாம் பயன்படுத்தும் எரிசக்தி அனைத்தும் இயற்கையை அதிகம் சுரண்டுவனவாகவும் அதிக பணம் கொடுத்து வாங்கவேண்டியவகையாகவும் காணப்படுகின்றன. எனவே இனிவரும் காலத்தில் புதுப்பிக்கத்தக்க மாற்று எரிசக்தி வளத்துக்கு மாறவேண்டிய தேவையுண்டு. சூரிய சக்தி, உயிர் வாயுத் தொகுதி, காற்று சக்தி போன்றவற்றைப் பயன்படுத்தும் நுட்பங்களை மாணவர் அறிய வகைசெய்தல் வேண்டும்.

தமிழர் உணவு முறையும் வாழ்வியல் முறையும் பல நோய்களை அணுகாது தடுக்கும். நமது முன்னோர் கடைப்பிடித்த உணவுமுறையையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் பின்பற்ற மாணவரை வழிப்படுத்தலாம்.

இதேபோல எமது மூதாதையர் பயன்படுத்தி மரபுவழி மருத்துவத்தையும் பின்பற்ற வழிப்படுத்தல் காலத்தின் தேவையாகும்.

சரியான முறையில் திட்டமிட்டு செயற்பட்டு உணவுப் பஞ்சமில்லாத நாட்டை உருவாக்குவதில் ஒவ் வொருவரும் தம்மால் இயன்ற பங்களிப்பை வழங்கினால் நாடு மீண்டும் உண வுத் தேவையில் தன்னிறைவு நிலை நோக்கிப் பயணிக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த வருடத்தில் கடனை திருப்பிச்செலுத்த 5 பில்லியன் டொலர்கள் வேண்டும் - ரணில்



நாட்டில இருக்குர பிச்சைகாரனுகள் எல்லாருக்கும் பாஸ்போட் முடிச்சி Uk USA Swiss னு அனுப்பி அங்க பிச்சை எடுக்கவிட்டா கடன் எல்லாத்தையும் அடைச்சிடலாம்ல




இங்க பாருடி காலங்காத்தால Vikram FDFS போறான்




நானே gas இல்லன்னு விறகு வாங்க போறேன் இவளுக வேற

**Sakeek Bin Fareed**
3h

CEB Right now,

Daily காலையில விடிஞ்சதுமே விடிஞ்சதுமே உன்ன தூங்க விடாம கரண்ட் வெட்டுவேன்.

ஏன்னா ஓலெவல் முடிஞ்சிலே..

குளிக்க போற நேரம் பாத்து, மொபைல் சார்ஜ் போட போற நேரம்லாம் பாத்து பாத்து வெட்டுவேன்.

ஏன்னா ஓலெவல் முடிஞ்சிலே..

எனக்கு Bored அடிக்கிற டைம்லாம் புது Schedule போட்டு இஷ்டத்துக்கு வெட்டுவேன்.

ஏன்னா ஓலெவல் முடிஞ்சிலே..

அடுத்த Festival வார வரைக்கும் பகல் ராத்திரினு விடாம வெட்டிகிட்டே இருப்பேன்.

ஏன்னா ஏன்னா ஏன்னா ஓலெவல் முடிஞ்சிலே...





இன்று காலை புகையிரதத்தின் எஞ்சின் பெட்டி கழன்று சென்ற சம்பவம் News

**Rislan Gowthu**
17 m

சிறு உலகு
குறு வாழ்வு
மூழ்கித் தத்தளிக்கிறது
ஆசை!



எல்லாத்துக்கும் காரணம் டாலர் பிரச்சினைதான்

**Kugaraj Sagathevan**
5h

தூள் திரித்துசென்ற முதியவரிடம் இருந்து #மிளகாய்_தூளை பறித்து சென்ற இளைஞர்கள்.
"கறியும் கள்ளக்கோழியாய் தான் இருக்கும்"
#யாழ்ப்பாணிஸ்





# மஹா கும்பாபிஷேகம்

முல்லைத்தீவு, ஜூன் 6

மாங்குளம், பனிக்கன்குளம் ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது.

சிவகுகக்குருக்கள், சிவகுகநாதக்குருக்கள், சிவகுகேந்திரக்குருக்கள், சோமகிரிதரக்குருக்கள், பரமேஸ்வரக்குருக்கள் ஆகியோர்களால் மஹா கும்பாபிஷேகக் கிரியைகள்,விஷேட பூசைகள் என்பன இடம்பெற்றன.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம்பெற்று வருகின்ற நிலையில் எதிர்வரும் 14 ஆம் திகதி சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ம-14)

# நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்.மாநகர சபை சைவசமய விவகாரக்குழுவால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் 30 ஆவது மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய கட்டுரைகள் 57 பக்கங்களுக்குள் அமையுமாறு ஆக்கங்கள் அமையவேண்டும். அத்துடன் ஏற்கனவே நல்லைக்குமரன் மலரில் வெளிவந்த, வேறு நூல்களில் வெளிவந்த ஆக்கங்கள் தவிர்க்கப்படவேண்டும்.

ஆக்கங்களை saivasamayavivaharam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் அல்லது இறுவெட்டுக்கள் மூலம் தங்களது முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்பட்டு அனுப்புவது அவசியமாகும்.

ஆக்கங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக்குழுத் தலைவர் இ.த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார். (ம-14)



# கண்ணகை அம்மனில் பாரம்பரிய பிரம்பு பூசை

கிளிநொச்சி, ஜூன் 6

புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல் ஆதி கண்ணகை அம்மன் ஆலயத்திலும் புதிய கண்ணகை ஆலயத்திலும் நேற்றுமுன்தினம் பாரம்பரிய பிரம்பு பூசை நடைபெற்றது.

புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல் ஆதி கண்ணகை அம்மன் ஆலயத்திலும் புதிய கண்ணகை ஆலயத்திலும் வருடாந்த வைகாசிப் பொங்கல் உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிலையில் இந்தப் பிரம்புப் பூசை இடம்பெற்றது.

இதன்போது, பண்டம் மாட்டு வண்டிலில் புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. மீண்டும் பொங்கல் உற்சவத்தன்று அங்கிருந்து இரு ஆலயங்களுக்கும் பறை முழங்க பாரம்பரிய முறைப்படி பண்டம் கொண்டு வரப்படும். (ம-14,21)

# சாவகச்சேரி பாடசாலைக்கு சரஸ்வதியின் திருவுருவச்சிலை

சாவகச்சேரி, ஜூன் 6

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் சரஸ்வதி திருவுருவச் சிலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெற்றோரால் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியில் ஆறு அடி உயரம் கொண்ட சரஸ்வதி திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுப் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப் பட்டது.

இதன்போது சரஸ்வதி திருவுருவச்சிலையை [illegible] தென்னிந்திய சிற்பக்கலைஞர் ஆர்.தியாகராஜா, பாடசாலை சமூகத்தால் கௌரவிக்கப்பட்டார். பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி வலயக்கல்வி ஓய்வுநிலை [illegible] கலந்து கொண்டார். (ம-14,159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரிரு தினங்களில் மீண்டும் மண்ணெண்ணெய் விநியோகம்

கொழும்பு, ஜூன் 6

**நாட்டில் தற்போது நிலவும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டுக்கு தீர்வுகாணும் வகையில் ஓரிரு தினங்களில் நுகர்வோருக்கு மீண்டும் மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொடுக்க முடியும் எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்ததாவது:-

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மண்ணெண்ணெய் ஓரிரு தினங்களில் சந்தைக்கு விநியோகிக்க முடியும்.

எனினும், நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிலையங்களில் தற்போது மண்ணெண்ணெய் கையிருப்பு இல்லை.

எனவே, மண்ணெண்ணெய்க்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டாம்- என்றுள்ளது. (ம)

## உலக சந்தையில் எரிபொருள் விலை சிறிதளவு வீழ்ச்சி!

கொழும்பு, ஜூன் 6

உலக சந்தையில் கச்சா எண்ணெயின் விலையில் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த மே 31ஆம் திகதி 124.24 டொலராக அதிகரித்திருந்த கச்சா எண்ணெய் பரல் ஒன்றின் விலை கடந்த வெள்ளிக்கிழமை 117 டொலராகக் குறைந்துள்ளது என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை வாங்க பின்னடிப்பது எதற்கு?

### கம்மன்பில கேள்வி



கொழும்பு, ஜூன் 6

ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள ஏன் அவதானம் செலுத்தவில்லை என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் பல்வேறு காரணிகளினால் இலங்கைக்கு டொலர் அனுப்புவதை தவிர்த்து வருகிறார்கள். டொலர் அனுப்பாவிடின் அதனால் ராஜபக்சக்கள் பாதிக்கப்படப் போவதில்லை. சாதாரண நடுத்தர மக்களே மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்க்கொள்வார்கள். அதனால் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தமது உறவுகளுக்காக வங்கிக் கட்டமைப்பின் ஊடாக டொலரை அனுப்பவேண்டும்.

உக்ரைன் - ரஷ்யா மோதலைத் தொடர்ந்து பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் கொள்முதலை தவிர்த்து வருவதை ஆசிய நாடுகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்கின்றன. ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு எரிபொருள் கொள்வனவு செய்யும் சாத்தியம் காணப்படும் பட்சத்தில் அது தொடர்பாக இதுவரை அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை.

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் தற்போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திருத்த யோசனைகளை முன்வைத்துள்ளோம். சர்வதேச உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அரசமைப்பு சார்ந்த ஒருசில விடயங்களை மறுசீரமைக்க வேண்டும் - என்றார். (எ-இ)

## குறைந்தளவு கையிருப்பால் டீசல் விநியோகம் மட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 6

டீசல் விநியோகத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மட்டுப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டீசல் கையிருப்பு குறைந்தளவில் காணப்படுவதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அதன் செயலாளர் தெரிவித்ததாவது:-

முன்னுரிமைப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மாத்திரம் டீசல் விநியோகிக்கப்படுகின்றது. தற்போது தினசரி டீசல் விநியோகம் சுமார் 2 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் வரையில் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் தற்போது சுமார் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் மாத்திரமே கையிருப்பில் உள்ளது.

எதிர்வரும் 9 அல்லது 10ஆம் திகதிகளில் டீசல் கப்பலொன்று நாட்டை வந்தடையவுள்ளது.

இந்தியக் கடனுதவியின் கீழ் அடுத்த டீசல் கப்பல் எதிர் வரும் 16ஆம் திகதி நாட்டை வந்தடையும் வரை தற்போது கையிருப்பில் உள்ள டீசலை வைத்து தற்போதைய நிலைமையை முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கின்றோம் - என்றார். (ச-இ)

## போக்குவரத்துத் துறையில் கட்டமைப்பு ரீதியில் மாற்றம்



கொழும்பு, ஜூன் 6

ஜூன் 15ஆம் திகதி முதல் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்துக்காகக் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் பொதுப்போக்குவரத்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் போக்குவரத்து அமைச்சர், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிறுவனங்களின் தலைவர்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, அன்றாட நடவடிக்கைகளுக்கான அலுவலக ரயில் மற்றும் பேருந்துச் சேவைகள், பள்ளி மாணவர்களுக்கான பேருந்துச் சேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் போன்றவை சில நாள்களுக்குள் மேம்படுத்த பல முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தனியார் பேருந்துச் சேவை மட்டுப்படுத்தப்படுகின்றது



கொழும்பு, ஜூன் 6

அடுத்த டீசல் கப்பல் நாட்டை வந்தடையும்வரை இன்று முதல் தனியார் பேருந்து சேவை மட்டுப்படுத்தப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேவர்த்தன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் விநியோகத்தில் அரச பேருந்துகளுக்கு முன்னுரிமை வழங்குவதைப் போன்று தனியார் பேருந்துகளுக்கும் முன்னுரிமை வழங்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தினோம். இருப்பினும் இதுவரை சாதகமான தீர்வு கிடைக்கவில்லை.

ஒரு பயணத்துக்குத் தேவையான டீசலைப் பெற்றுக்கொள்வதுகூட தற்போது பெரும் போராட்டமாகக் காணப்படுகிறது. எரிபொருள் வரிசையில் நிற்பதா? அல்லது போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடுவதா? என்ற பிரச்சினையை பேருந்து உரிமையாளர்கள் தற்போது எதிர்கொண்டுள்ளனர். நடைபெற்று முடிந்த சாதாரண தரப் பரீட்சையை கருத்திற்கொண்டு கடந்த நாள்களில் சேவையில் ஈடுபட்டோம். இந்த நிலையில் அடுத்த டீசல் கப்பல் நாட்டுக்கு வரும்வரை இன்று முதல் தனியார் பேருந்துப் போக்குவரத்து சேவை மட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை- எரிபொருள் விலையேற்றத்துக்கமைய பேருந்துக் கட்டணம் திருத்தம் செய்யப்பட்ட போதிலும் அது தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான தீர்வாக அமையாது. வாகனங்களின் உதிரிப்பாகங்களின் விலையேற்றத்துக்கமைவாகவே பேருந்துக் கட்டணம் மேலும் திருத்தம் செய்யப்பட வேண்டும். எனவே அரசு இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிடின் எதிர்வரும் காலங்களில் தனியார் பேருந்துகள் சேவை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும்- என்றார். (ச-இ)

## நுவரெலியா மாவட்டத்தில் பலாமரம் வெட்டத்தடை

கொழும்பு, ஜூன் 6

நுவரெலியா மாவட்டத்தில் பலா மரங்களை வெட்டுவதற்குத் தடை விதித்து நுவரெலியா மாவட்டச் செயலர் நந்தன கலபொட உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நாட்டில் நிலவும் உணவு நெருக்கடியைக் கருத்திற்கொண்டு அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இனிவரும் காலத்தில் அனுமதிபெற்றும் பலா மரங்களை வெட்ட முடியாது.

எனினும், விபத்துக்களை ஏற்படுத்தும் வகையில் உள்ள பலா மரங்களை வெட்ட மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹீரோயிசம்'....

முற்பட்ட இருவர் மடக்கிப்பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொன்.சிவகுமாரன் நினைவேந்தல் நேற்று மாலை நடைபெற்றது. அதில் பல் கலைக்கழக மாணவர்கள் பங்கேற்றிருந் தனர். நினைவேந்தல் முடிவடையும் நேரத்தில், பல்கலைக்கழக பிரதான வாயில் ஊடாக வேகமாக மோட்டார் சைக் கிளில் இருவர் நுழைந்தனர்.

பல்கலைக்கழக பிரதான வாயிலுக்கு அண்மையிலிருந்த கல்லாசனத்தில் அமர்ந்திருந்த மாணவிகள் மற்றும் குடிதண்ணீர் எடுப்பதற்காக பல்கலைக்க ழகத்துக்குள் வந்த விடுதி மாணவிகளை மோட்டார் சைக்கிளில் வந்த ஆசாமிகள் அச்சுறுத்தினர். கல்லாசனத்திலிருந்த மாணவிகளையும் எழுப்பிக் கலைத்தனர். அங்கிருந்த மாணவ, மாணவியர் மீது தாக்குதல் நடத்தவும் முற்பட்டனர். இதன் போது மாணவர்கள் ஒன்றுசேர்ந்து இரு வரையும் மடக்கிப்பிடித்தனர்.

கோப்பாய் பொலிஸாருக்கு இது தொடர் பில் அறிவிக்கப்பட்டது. அவர்கள் உடன டியாக அங்கு வரவில்லை. இதற்கிடையில் பல்கலைக்கழக துணைவேந்தர் சிறிசற்குணராஜா சம்பவ இடத்துக்குச் சென்றார். அவரும் பொலிஸாருக்கு முறையிட்டார். இதன் பின்னரே பொலி ஸார் வந்தனர். மடக்கிப்பிடிக்கப்பட்ட இரு வரையும், அவர்களது மோட்டார் சைக்கி ளையும் மீட்டுச் சென்றனர்.

இதேவேளை- பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்யவில்லை என்று மாண வர்கள் குற்றஞ் சுமத்தினர். (ஒ-இ)

## ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**
**உப அலுவலகம், சுன்னாகம்**

**வட்டாரம் -07, அம்பலவாணர் வீதி, ஆதன இல - 8/8**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத் திற்குட்பட்ட அம்பலவாணர் வீதி. சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம் -07, அம்பலவாணர் வீதி. ஆதன இல: 8/8 ல் Mr.S இராசையா tenant Miss. R பராசக்தி எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு ஐயாத்துரை ராஜசிங்கம் முகதாவில் வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை. வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவு J/186 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "திக்கி ரியும் அம்பலகிணத்தடியும்" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 03 குழி 17.55 உடைய ஆதனமானது 2006.01.12 ஆம் திகதிய 2582 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**அதன் எல்லைகளாக,**

கிழக்கு - துண்டு 2 என அடையாளமிடப்பட்ட ஆதனம்
வடக்கு - ஒழுங்கை
மேற்கு - நல்லதம்பி பாலசுப்பிரமணியத்திற்கும், பொன்னுத்துரை அம்பிகைவாகனுக்கும் உரிய ஆதனம்
தெற்கு - மாணிக்கவாசகர் பெண் நடேஸ்வரிக்குரிய ஆதனம்

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் T. தங்கராஜா அவர்களால் 2021.12.10 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 12410 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 ஆகிய நிலப்பரப்பு 03 குழி 17.55 ஆகும். இவ்ஆதனத்தை பிரிசித்த நொத்தாரிசு ரட்ணம் ரகுராஜ் அவர்கள் மூலம் 2008.01.21 ஆம் திகதிய 1363 ஆம் இலக்க நன்கொடை உறுதியால், கந்ரோடை மேற்கு சுன்னாகம் என்னும் இடத்தைச் சேர்ந்த அற்றோனிக்தத்துவகாரரான விஜயகுமார் கைம்பெண் சிறீரஞ்சனா 707300639V) என்பவர் கந்தசாமி சுபாஸ்கரன் பெண் விஜிதா எனும் பெயரிற்குப் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

எனவே இப்பெயர் மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறு அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது கந்தசாமி சுபாஸ்கரன் பெண் விஜிதா எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வ தற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவு களிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க. தர்ஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

(CS 45066) (3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 05 . 1939



மறைவு 31 . 05 . 2022

### திருமதி வீரகத்தி கனகம்மா

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்துவந்தவருமான திருமதி வீரகத்தி கனகம்மா அவர்கள் கடந்த (31.05.20202) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகசபை கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி கண்மணி, தம்பதிய களின் அருமை மருமகளும், கணேசலிங்கம் (ஜேர்மனி), சத்தியேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் கருணலிங்கம் (அதிபர் - கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை), குகனேஸ்வரி (நயினாதீவு), சண்முகலிங்கம் (சுவிஸ்), புஸ்பராணி (நெதர்லாந்து), கலைச்செல்வி (பிரான்ஸ்), கேதாரகௌரி (சுவிஸ்) ஆகியோரின் ஆருயிர் தாயாரும், வசந்தி (ஜேர்மனி) ஆனந்தகுமாரன் (ஜேர்மனி), சோதிமலர், இராஜேஸ்வரன், சறோஜினி (சுவிஸ்), இளமுருகன் (நெதர்லாந்து), மகேசலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2022) செவ்வாய்க்கிழமை 95 Rue Marcelsembat, 93430 Villetaneuse, France இடம்பெற்று தகனம் செய்யப்படும். அத்துடன் அன்னாரின் நயினாதீவு இல்லத்தில் நாளை (07.06.2022) செவ்வாய்க்கிழமை மதியம் 12.30 மணியளவில் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீரதாயகம்,**
**நயினாதீவு - 08.**

**077 127 1809**
**077 045 4924**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நீங்காத நினைவுகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கதிரவேலு திருநாவுக்கரசு

**(ஓய்வுநிலை அதிபர் – யா/ஆனைக்கோட்டை உயரப்புலம் மெ.மி.த.க பாடசாலை)**

**ஆசிரியர் - யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)**



**தோற்றம்**
**21.11.1937**

**மறைவு**
**19.05.2021**

எங்கள் அன்புத் தந்தையே.!
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எம் சோகம்.
பன்னிரு மாதங்கள் என்ன
யுகங்கள் பல ஆனாலும்
மாறாது எங்கள் துயர்
மறையாது உங்கள் முகம்.

ஆரத்தழுவி அணைத்த கரங்களும்
ஆழ்ந்து நாம் உறங்கிய மடியும்
நேசம் தரும் தங்கள் ஆளுமையும்
சிந்தனை சொல் செயலும் இன்றியே
சிந்தை கலங்குகின்றோம் அப்பா!

கம்பீரம் மிக்க உங்கள் குரலும்
மனம் கவரும் உங்கள் பேச்சும்
மறுபடியும் கேட்கத் தவிக்கின்றோம் - அப்பா!
ஆயிரம் உறவுகள் அருகிருந்தாலும்
அவனியில் எங்கள் தந்தைக்கு நிகராகுமா!

கடந்த 19.05.2021 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று 10.30 மணியள வில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கேற்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

**[illegible] வில் வீதி,**
**பக்கஸ் லேன், மானிப்பாய்.**

**குடும்பத்தினர்**

(CS 1131) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத்...

பல்வேறு திட்டப் பணிகளை மத்திய இணை அமைச்சர் ஆய்வு செய்துவருகிறார். இந்நிலையில் இலங்கைத் தமிழர்களுக்கான உதவிகள் குறித்து மத்திய அமைச்சருடன் ஆளுநர் தமிழிசை ஆலோசனை நடத்தினார்.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், சந்திப்பின்போது வெளியுறவுத்துறை சார்பில் இலங்கை தமிழர்களுக்கான உதவிகள் பற்றியும், புதுச்சேரியில் நலிவடைந்த கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கலாசார நிகழ்வுகளை நடத்துவது பற்றியும் மற்றும் பல மத்திய அரசு சார்ந்த திட்டங்களை நிறைவேற்றுவது பற்றியும் புதிய திட்டங்கள் கொண்டு வருவது பற்றியும் விவாதித்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)


## யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை

**100ஆவது சர்வதேச கூட்டுறவு தினம் மற்றும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் பொன் விழாவையொட்டிய போட்டிகள்**

சபையினால் மேற்படி நிகழ்வுகளை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே போட்டிகளை

6, 7, 8 - பிரிவு - I
9, 10, 11 - பிரிவு - II
12, 13 - பிரிவு - III

ஆகிய பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது. போட்டிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவித்தல்களை சபையில் பெற்றுக் கொள்ளலாம்.

❖ போட்டி தொடர்பான சுற்றறிக்கைகள் பாடசாலைகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

செயலாளர்,
யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப 2ஆவது மாடி
இல. 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல
021 222 2324
Jaffnadcc@gmail.com

(CR 36073) (3/6)


## நினைவஞ்சலி

2ஆம் ஆண்டு (அப்பா) 1ஆம் ஆண்டு (அம்மா)

பிறப்பு 07 - 04 - 1939
இறப்பு 26 - 03 - 2020



பிறப்பு 14 - 11 - 1942
இறப்பு 18 - 05 - 2021

**நல்லதம்பி நவரத்தினசிங்கம்**
(முன்னாள் கமநல சேவை உத்தியோகத்தர்)

**நவரத்தினசிங்கம் கிரிசாம்பாள்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
திதி: 06.06.2022

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்**
**வானுறையும் தெய்வம் ஆகினீர்**
அம்மையும் அப்பனுமான ஒப்பிலாமணிகளே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்
வானுறையும் தெய்வம் ஆகினீர்
செம்மையாய் செதுக்கி எமை வளர்த்தீர்
சிறப்பான வாழ்வமைத்துத் தந்தீர் - நீவிர்
இம்மையில் எம் பெற்றோராய் வாய்த்ததெம் தவப்பயன்
எம்மை விட்டு என்றும் அகலாது உம் நினைவுகள்
என்றும் அணையாத தீபங்களாய் வானில்
ஒளிவீசிப் பிரகாசித்துக் கொண்டிருப்பீர்

உங்கள் நினைவுகளுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

465/4 K.K.S வீதி,
யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 04 . 1928



இறப்பு 05 . 06 . 2022

**திருமதி அன்னலட்சுமி சந்திரசேகரம்பிள்ளை**

திருநெல்வேலி, இராமநாதன் வீதியை சேர்ந்த திருமதி அன்னலட்சுமி சந்திரசேகரம்பிள்ளை நேற்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வப்பெருமாள் நாகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற திரு.க.சி.சந்திரசேகரம்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்ற சிவராசபிள்ளையின் சகோதரியும், Dr.நிலாயதாச்சி, காயாரோகணன் (ஓய்வு பெற்ற பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற பராபரை (மாநகர பொறியியலாளர்), சிவானந்தவல்லி (ஆசிரியர், B.Com.MBA) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற மாவட்ட மருந்தாளர்), தபோநிதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும், Dr. அரவிந்தன் (உதவி சுகாதார வைத்திய அதிகாரி), Dr.லோகிதா அரவிந்தன் (யாழ். போதனாவைத்தியசாலை), சுதர்சன் (அவுஸ்ரேலியா), திருமதி சுதர்சினி சுதர்சன் (B.A - அவுஸ்திரேலியா),சிவதர்சன் (UK), திருமதி கலைவதனி சிவதர்சன் (B.A - UK), Dr.சௌமி (யாழ். போதனா வைத்தியசாலை), லவலோஜன் (பொறியியலாளர்), சௌஜா (வைத்தியபீட மாணவி), கஜானன் (பொறியியல் பீட மாணவன் - மொறட்டுவ), சௌயந்தி (விவசாய முகாமைத்துவபீட மாணவி - வயம்ப) ஆகியோரின் பேர்த்தியும், ஆருக்ஷி, ஆகர்ஷி, சாருஜன், ஸாஷ்வி, சுவஸ்தி, ஆத்மி, அகிஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.06.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

228/2, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
மகன் - காயாரோகணன்
074 144 9899, 077 731 4166

(cs 45079) (2.6)

## மரண அறிவித்தல்

மண்ணில் 20 . 06 . 1935



விண்ணில் 04 . 06 . 2022

**அமரர் திரு. சின்னத்தம்பி அரியநாயகம்**
(ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர் E.S)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர் சின்னத்தம்பி அரியநாயகம் அவர்கள் கடந்த (04.06.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற சேதுப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமகள், திருச்செல்வம், தயாபரன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதன்மோகன், ஜீவிதா, சண்முகப்பிரியா, பூர்ணிமா ஆகியோரின் அன்பு மாமனாரும், அட்சரன், அபிஷ்ணவி, தேனுஜன், ஹரிஸ்மன், ஜெயவைஷ்ணவி, நேத்ரன், தருணிகா, பிருத்திகா, டிவேஷ்கரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2022) திங்கட்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


077 349 4480

தகவல்:
குடும்பத்தினர்

(CR 36084) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 . 03 . 1956

மறைவு
30 . 05 . 2020

## அமரர் ஆறுமுகம் உருத்திரமூர்த்தி

**திதி : அட்டமி (06.06.2022)**

சுதுமலை அம்மன் கோவிலின்
நிரந்தர தொண்டனாய்
அடியார்களுக்கு அடியவர் ஆனாய்
அம்பாளுக்கு ஓர் அபிராமி பட்டரானாய்
நிஜமாக நீங்கள் மறைந்து ஈராண்டு ஆனதோ
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
உங்களை நினைத்து தினம் தினம்
நான் ஏங்கித் தவிக்கின்றேன்.
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
என் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் தொடரும்
உங்களை என் உள்ளத்தில் வைத்து பூஜிப்பேன் தெய்வமே

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

சுதுமலை வடக்கு,
சுதுமலை.

ஆருயிர் மனைவி
உருத்திரமூர்த்தி பவானி (ஆசிரியர்)

(CS 44845)(3/6)

# எட்டாவது ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
15 . 05 . 1939

மறைவு
04 . 06 . 2014

## திருமதி சறோஜினி துரைசிங்கம்

(ஓய்வுநிலை விஞ்ஞான ஆசிரியை - BSc.(Cey)

**திதி: சப்தமி**

ஐம்பது ஆண்டுகள் நாம் இணைந்து
வாழவில்லையாயினும், நாங்கள் இருவரும்
இணைந்த வாழ்நாள்கள் எனது காலத்தின்
- பொன்னாட்கள்

இன்று எட்டு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் அந்த எட்டு ஆண்டுகள்தோறும் எமது வாழ்நாள் காலத்தில் பொன்னாட்களை நினைவு கூர்ந்து களிக்கின்றேன்.

என்றும் உம் நினைவுகளுடன்

588/4, நாவலர் வீதி,
அரியாலை.

கணவர்,
குடும்பத்தினர்

(cs.45068) (2.6)

# மரண அறிவித்தல்



மண்ணில்
08 . 12 . 1943

விண்ணில்
04 . 06 . 2022

## பொன்னையா இரத்தினபூபதி

ஈஞ்சடி சுதுமலை வடக்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா இரத்தினபூபதி கடந்த (04.06.2022) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை நல்லம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கார்த்திகேசு செல்லம்மாவின் மருமகளும், காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், சிவதாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவகுமார் (நிலையப்பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் - பருத்தித்துறை நீதிமன்ற பிரிவு), நந்தகுமார் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் ), ரஜனி (ஜேர்மனி), சுதர்சினி (ஜேர்மனி), சுரேஸ்குமார், சுபாசினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமுதினி (ஆசிரியர்-யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க பாட்சாலை), விஜிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்,சங்கானை),சற்குருநாதன் (ஜேர்மனி), பத்மசீலன் (ஜேர்மனி), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற ஜெயரஞ்சிதம் மற்றும் சிவசுப்பிரமணியம், மகேஸ்வரி, இந்திராதேவி, காலஞ்சென்றவர்களான கந்தையா,சின்னம்மா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் அக்ஷிகா, வருணிகா, ஆருஷா, அஜீசன், அபிரா,கஸ்மிரா, விதுசன், அபிஷன், மயூரிக்கா, தன்ஜா, கம்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**021 225 6323** **தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



தோற்றம்
10 - 04 - 1947

மறைவு
04 - 06 - 2022

## கந்தையா மகாலிங்கம்

மயிலணி வடக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (04.06.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு வெள்ளைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், திவாகரன் (லண்டன்), டினேஸ்கரன் (அமெரிக்கா), ஹரிபிரசாத் (சுவிஸ்), கபாஸ்கரன் (லண்டன்), நிருசன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிந்து, ராஜி, டயூ ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வின், யஸ்மியா, அனன்யா, ரோகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், வீரசிங்கம், செல்வராணி காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், சுந்தரலிங்கம், தர்மலிங்கம், ருக்மணி, மாணிக்கம், நாகம்மா, பூரணம், ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசு, இராசா, நித்தியானந்தம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணயளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

மயிலணி வடக்கு,
சுன்னாகம்

(CS 45078 ) (3/6)

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி பெற்றவர்கள் மீது பாயாது நடவடிக்கை!!

## பம்முகிறார் மைத்திரி

கொழும்பு, ஜூன் 6
கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த முடிவைமீறி அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்ட நிமல் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் படமாட்டாது- இவ்வாறு சுதந்திரக்கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

சுதந்திரக்கட்சியின் விசேட கூட்டமொன்று நேற்றுமுன்தினம் மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நடைபெற்றது.

நிமல் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர, ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, துமிந்த திஸாநாயக்க மற்றும் லசந்த அழகியவன்ன ஆகியோர் இந்தச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். இதன்போது, கட்சியில் நாங்கள் வகித்த பதவி பறிக்கப்பட்டு விட்டதென நீங்கள் அறிக்கை விடுத்துள்ளீர்கள். அப்படி அறிக்கை விடுத்து, எதற்காக சந்திப்புக்கு அழைக்கவேண்டும். இனி நாங்கள் வரப்போவதில்லை என்று நிமல் சிறிபாலடி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

'நான் அந்த அறிக்கையை விடுக்கவில்லை. கட்சி பொதுச்செயலர் தான் விடுத்துள்ளார். உங்கள் இருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது' என மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார். 'சர்வ கட்சி அரசு என்ற யோசனை சுதந்திரக்கட்சிக்குரியது. எனவே, அதனை ஆதரித்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவதில் தவறில்லை' என இதன்போது உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-ஒ.44)

---

சுற்றுலாத்துறையை 'நிமிர்த்த'

# பொலிவூட் நட்சத்திரங்களை தேடிச் சென்ற அமைச்சர்

கொழும்பு, ஜூன் 6
இலங்கையின் சுற்றுலாத்துறை மற்றும் சினிமாத்துறை அபிவிருத்தி தொடர்பில் பொலிவூட் நடிகர்களை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சந்தித்துள்ளார்.

நடிகை சித்ரங்டா சிங் மற்றும் டினோ மொரியா ஆகியோர் சுற்றுலாத்துறை அமைச்சருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, இந்திய சினிமா காட்சிகளுக்காக இலங்கையில் படப்பிடிப்புகளை மேற்கொள்வது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (அ-ஒ.இ)

---

விபத்தில் சாவடைந்த

# 16 வயது மாணவனால் இருவர் வாழ்வில் 'ஒளி!'

கொழும்பு, ஜூன் 6
விபத்தில் உயிரிழந்த 16 வயதுடைய பாடசாலை மாணவனின் கண்களால் இரு இளைஞர்களுக்கு பார்வை கிடைக்கப் பெற்றுள்ளது.

கலென்பிந்துனுவெள, கெட்டலாவ பகுதியைச் சேர்ந்த தக்ஸத இமேஷ் தனபால என்ற மாணவனின் கண்களே இவ்வாறு தானம் செய்யப்பட்டன. அலுத்தியுல்வெள மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் இந்த மாணவன், கடந்த மே 31ஆம் திகதி விபத்தில் சிக்கி மூளைச் சாவு அடைந்து உயிரிழந்தார். உயிரிழந்த மாணவனின் கண்களை தானம் செய்ய பெற்றோர் சம்மதம் தெரிவித்ததையடுத்து, கொழும்பு கண் தான தலைமையகத்தின் ஊடாக இரண்டு இளைஞர்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சிறுவனின் இறுதிச் சடங்குக்கு முன்பே இரண்டு இளைஞர்களுக்கும் பார்வை சீரடைந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஒ-இ)

---

### இரு வாரங்களில்...

எதிர்வரும் நாள்களில் அரிசி ஏற்றிக் கொண்டு லொறிகள் பாதையில் செல்லவும் முடியாத நிலை ஏற்படலாம். ஏனெனில் பஞ்சத்தில் இருக்கும் பொதுமக்கள் ஒன்று திரண்டு அடித்து பறித்துக் கொண்டு சென்று விடுவார்கள் என்றும் அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் அச்சம் வெளியிட்டது.

மறுபுறத்தில் அரிசி ஆலை உரிமையாளர்கள், வங்கிகளில் பெற்றுக் கொண்ட கடன்களை திருப்பி செலுத்த வழியின்றி, வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை திருப்பி ஒப்படைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டது. (அ-ஒ-இ)

### ஆட்சியாளர்...

தட்டுப்பாடுகளும் இல்லை. மக்களின் பிரச்சினைகளை அவர்கள் கண்டுகொள்வதும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியதாக, அவரது ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

அரசாங்கம் அண்மையில் வரிக்கு மேல் வரி விதித்தது. அவ்வாறு விதிக்கப்பட்ட வரிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் சமூக ஊடகங்களுக்கும் பொருந்தும். அதன் பிரகாரம் தொலைபேசிகள் சார்ந்தும் மிகப்பெரிய வரி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இது சமூக ஊடகங்களை முடக்குவதற்கான ஒரு நிகழ்ச்சி நிரலாகும். மேலும், விவசாய விளைச்சல் பாதிப்புக்கு இதுவரை அரசாங்கம் இழப்பீடு வழங்கவில்லை. ஆனால், மக்களை விவசாயம் செய்யச் சொல்கிறார்கள். இரண்டு வருடங்களாக காபனிக் உரம் எனக் கூறிக் கொண்டு புராணம் சொல்லி விவசாயத்தை அழித்தவர்களே இப்போது விவசாயம் செய்யச் சொல்வது கேலிக்கூத்தானது. உணவுப் பாதுகாப்புக்காக ஐக்கிய மக்கள் சக்தி விவசாயப் புரட்சியை இன்று ஆரம்பிக்கவுள்ளது- என்றார். (அ-ஒ-இ)

### துப்பாக்கிச்...

தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த 72 மணித்தியாலங்களில் 4 வெவ்வேறு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 4பேர் கொல்லப்பட்டுள்ளனர். (ஒ-இ)

### சாராயப்.....

உடைந்து, உடலில் கடும் காயமேற்பட்டு உயிரிழந்துள்ளார். ஏ-9 வீதியில் பரந்தன் சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதில் கிறிஸ்ரோப்பர் இருதயராஜ் (வயது - 41) என்பவரே உயிரிழந்துள்ளார்.

பரந்தன் சந்தியை அண்மித்த பகுதியில் குருதிப் பெருக்குடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த ஒருவரை அவதானித்த கடை உரிமையாளர் ஒருவர், 1990 அவசர அம்புலன்ஸ் சேவைக்கு தகவல் வழங்கினார். அவரை மீட்டு கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதும் உயிரிழந்துள்ளார். போத்தலால் குத்தப்பட்டு அதிக அளவு குருதி பெருக்கெடுத்து காணப்பட்டது.

சம்பவம் அருகில் உள்ள சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது. மதுபான கடைக்கு வந்த நபர், போத்தல் ஒன்றை வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டு வெளியேறியுள்ளார். தள்ளாடியபடி சென்று நிலத்தில் விழுந்த போது, போத்தல் உடைந்து, உடலில் குத்தியுள்ளது. இதனாலேயே அதிகமான குருதிப்போக்கால் அவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத்தடுப்பு பிரிவு பதில் பொறுப்பதிகாரி மற்றும் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் [illegible] பில் விசாரணை[illegible] வருகின்றனர். (அ-ஒ-113)

### பால்மா...

தேசிய மற்றும் வெளிநாட்டு பால்மா நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு பெறுமதி சேர் வரி அறவிடப்படுவதில்லை. எனினும் பால்மாவுக்கு இந்த வரி அறவிடப்படுமா அல்லது இல்லையா என்பதை அரசாங்கம் உறுதியாக தெரிவிக்கவில்லை. பால் மாவுக்கு பெறுமதி கூட்டல் அறவிடப்படா விட்டாலும் விசேட சந்தை பொருள் வரி உட்பட சில வரிகள் கொண்டு வரப்பட்டுள்ளதால், மீண்டும் ஒரு முறை பால் மாவின் விலைகளை அதிகரிக்க நேரிடும்.

மேலும் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபா மதிப்பிழந்துள்ளமையும் விலைகள் தொடர்பில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை ரூபாவின் பெறுமதி 40 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த நிலையில், பால் மாவின் புதிய விலைகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. எனினும் விரைவில் 50 சதவீதத்தால் விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்படக் கூடும் என்று பால்மா நிறுவனங்கள் தெரிவித்தன. (அ-ஒ-இ)

### லாப்ஸ்...

கிலோ எரிவாயு சிலிண்டர் 2 ஆயிரத்து 740 ரூபா என்றும் முகவர்கள் தெரிவிக்கின்றனர். லாப்ஸ் எரிவாயு விலை உயர்வு குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு எதையும் இதுவரை வெளியிடவில்லை. இதேவேளை லாப்ஸ் காஸ் இன்று முதல் சந்தைக்கு விநியோகிக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### இ.போ.ச....

இதேவேளை-இன்று முதல் தனியார் பஸ் சேவைகள் 50 வீதத்தால் குறைக்கப்படும் என பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### அரச...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ் [illegible]கொண்டு கருத்து [illegible]வர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற் கொண்டு இவ்வாறான தீர்மானத்தை முன் மொழிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-ஒ-இ)

### தமிழ்த்...

யக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய 6 கட்சிகளின் தலைவர்கள் இன்று கூடி ஆராயவுள்ளனர்.

இதற்கு முன்னர் இரு தடவைகள் இது தொடர்பில் ஆராய்ந்திருந்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சில தினங்களுக்கு முன்னர் கூட்டிய சர்வ கட்சிக் கூட்டத்தின் பின்னர் முதல் தடவையாக தமிழ்த் தேசியக் கட்சிகள் இது தொடர்பில் ஆராயவுள்ளன. (அ-ஒ-5)

### விவசாயிகளுக்கு...

பட்டது.

கோப்பாய் பிரதேச செயலகம், அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் அச்சுவேலி விவசாய சம்மேளனத்தின் முயற்சியால் விவசாயிகளுக்கு ஒழுங்முறைப்படுத்தப்பட்டு டீசல் வழங்கப்பட்டது. இதேபோன்று மண்ணெண்ணெய் விநியோகமும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டால் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ஒ-20)

### விவசாயிகள்...

ணெண்ணெய் வழங்குவதற்கான நடவடிக்கைகளில் இந்தியத் தூதரகம் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்திய அரசு ஏற்கனவே தீவகப் பகுதி மீனவர்களுக்காக 75 பரல் மண்ணெண்ணெயை நன்கொடையாக வழங்கியிருந்தது. இதன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மீனவர்கள், விவசாயிகள், அரசியல் தலைவர்கள் மண்ணெண்ணெய் வழங்குமாறு இந்தியாவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர். அந்தக் கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலித்த இந்தியா, சுமார் இரண்டரை லட்சம் லீற்றர் மண்ணெண்ணெயை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸில் பரிந்துரைத்த திட்டங்களுக்குத் தடை

கொழும்பு, ஜூன் 6

பஸில் ராஜபக்ச நிதியமைச்சராக இருந்த காலத்தில் அவரால் பரிந்துரைக்கப்பட்ட இரண்டு திட்டங்களை இடைநிறுத்துவதற்கு நிதியமைச்சு தீர்மானித்துள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவால் முன்வைக்கப்பட்ட இரண்டு திட்டங்களே இவ்வாறு இடைநிறுத்தப்படவுள்ளன. அதன்படி 4 ஆயிரத்து 917 உள்ளூராட்சிப் பிரிவுகளுக்குத் தலா 4 மில்லியன் ரூபா வீதம் 19.67 பில்லியன் ரூபா வழங்கல் மற்றும் கிராமப்புற சமூக மேம்பாட்டுக்கான 85 பில்லியன் ரூபா நிதித் திட்டம் ஆகியனவே நிறுத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் நாட்டின் பொதுத்துறை முழுவதும் சாத்தியமான செலவினக் குறைப்புக்களை மீளாய்வு செய்வதற்கு ஏற்ப இந்த நடவடிக்கை நிதியமைச்சால் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

(ச-இ)

## உற்பத்திகளின் அடிப்படையிலான பொருளாதாரமே நாட்டுக்கு மீட்சி!

நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6

உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தாலேயே நாட்டுக்கு மீட்சி ஏற்படும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக உயர் பதவியில் இருப்பவர்களைப் பதவி விலகுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். பதவி விலகல் மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண முடியாது. எந்தவொரு கோஷமும் நாட்டுக்கு பொருளாதார ரீதியில் உதவாது. முதலில் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும். உற்பத்தி அடிப்படையிலான பொருளாதாரத்தை நோக்கிச் செல்வதே இலங்கையின் முன்னோக்கிய ஒரே வழி - என்றார். (ச-இ)


திருமாங்கல்யம் திருமண சேவை

உள்நாட்டில் உத்தியோகம் புரியும் மணமகன்களுக்கு உள்நாட்டில் உத்தியோகம் புரியும் மணமகள்கள் தேவை.

thirumaangalyam.com
077 120 4651, 021 728 4433

உயிரியல் மற்றும் இரசாயனவியல் (Biology & Chemistry)

2024 A/L மாணவர்களுக்கான
ஆரம்பம் - 08/06/2022
தனி, குழு மற்றும் Zoom வகுப்புக்கள்
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்
கட்டணம் :- Rs 2000/Month
குறிப்பு -: 2022 A/L மாணவர்களுக்கான Paper Class ஆரம்பம்
தொடர்புகளுக்கு:- 076 778 1442

வேலையாள்கள் தேவை

யாழ்நகரை அண்மித்த பகுதியிலிருந்து
Basic Computer, Basic English
Basic Graphic Design
அறிவுடைய பெண்
வேலையாள்கள் தேவை.
077 353 3809, 077 353 7338
(cs 45032) (2.6)

ஈச்சமோட்டை, கலட்டிப்புலம்,
அருள் மிகு ஸ்ரீஞான வைரவர் ஆலயத்துக்கு
குருக்கள் தேவை

மேற்படி ஆலயத்துக்கு மூன்று காலப்பூசை செய்வதற்கும். குருக்கள் தேவை. தங்கியிருந்து பூசை செய்வதற்கு வீட்டு வசதியும் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

விண்ணப்பங்களை: 13.06.2022 ஆம் திகதிக்கு முன்னர். கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும்.

ஈச்சமோட்டை கலட்டிப்புலம்,
ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.
தலைவர் செயலாளர்
(cs 45069) (2.6)

வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு தகுதியானவர்களிடமிருந்து கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1). வரவேற்பாளர்கள் Receptionist
2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் Marketing Executive
3). கணினி தொழிநுட்பவியலாளர் IT Technician

தகுதியானவர்கள் இன்று (06.06.2022) திங்கட் கிழமை முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

உதயன் பணிமனை
இல.361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✔ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
- ✔ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
- ✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✔ நன்னீரூற்று
- ✔ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- ✔ மூன்று வழிப் பாதை மேட்டு நிலம் கைதடி சந்தி 500 M தூரம்
- ✔ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ 1 பரப்பின் விலை 3 லட்சம்
- ✔ பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை

தொடர்பு:
076 43 65 814
(CS 1127) 1-6

Canada Work Visa 2022 & 2023

1. Business management 2. Hospitality 3. Visual Arts 4. Medical & Health Care
● Other categories
Baker, Plumber, Cook, Hairstylist, Electrician, Welder, Painter, Tile setter and etc...
● Minimum Qualifications - A/L No need IELTS
Visa Consultant :
134 Adiyapatham Road, Thirunelvely, Jaffna T.P 0770385584
Email Id: naltejaffna@gmail.com

எழுகை அறிவாலயம்
மாலை நேர கற்கை நெறி
திறப்புவிழா -27.05.2022
முத்துமாரி நகர் புளியங்குளம்
எழுகை சுவிஸ் தன்னார்வு தொண்டு நிறுனத்தின் ஊடாக
திரு.சின்னப்பு யோகராசா
அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இன்று (06.06.2022) திங்கட்கிழமை 2.00 மணியளவில் மாலை நேர வகுப்புக்கள் (பாடத்திட்டங்களை உள்ளடக்கியது) ஆரம்பம் என்பதனை அனைத்து மாணவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

எழுகை இலங்கை நிர்வாகம்
(cs.45080) (2.6)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்
4 பரப்பு காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு
- ❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- ❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
- ❖ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ❖ வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு: ஜெயம்
077 814 7389, 077 241 7589


## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 21 - 12 - 1950 | | 04 - 06 - 2022 |



### அமரர் சாமுவேல் தேவராணி

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சாமுவேல் தேவராணி அவர்கள் நேற்று முன்தினம் (04.06.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேல் இரத்தினம் தம்பதிகளின் புதல்வியும், தேவரத்தினம், சிறிதரன், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் பத்மராஜன் (France) இரத்தினராணி (London), புஸ்பராணி (Colombo), ஜெயராணி (London) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 795 7519, 077 932 5237, 077 222 4186

தகவல் : குடும்பத்தினர்

(CS 45081) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.